இலவச வெளியீடு: யேர்மனி - இங்கிலாந்து ஆவணி. Aug . 2011
Free Circulation

# வெற்றிமணி
## Vettimaniy

மணி 61 பிரதம ஆசிரியர் கலாநிதி மு.க.சு.சிவகுமாரன் B.F.A. ஓசை 181

## யார் இந்த மன நோயாளிகள்?

யாழில் இருந்து - நிகழ்யா



## கடலுக்கு அடியில் சொர்க்க விடுதி

## தேர்த்திருவிழா

## இன்று அதிகம் பேசப்படுகின்ற அமைதியான நாயகன் சூர்யா பற்றி....

## சாதனை!

## கனடாவில் 144 வது பிறந்த தினக் கொண்டாட்டம்!


Orientalische Textilien & Schmuck
Germany



21 ஆண்டுகளாக நம்பிக்கை!
நாணயத்தின்!! இருப்பிடம்.
தரமான தங்க நகைகளுக்கு
உத்தரவாதமிக்க
நகைமாளிகை
Königswall 16 (Am HBF) 44137 Dortmund
Tel: 0231/162377 Fax: 49.0231/147836

Orient Textiles & Jewellery U.K
வட தென் இந்திய சேலைகள் நங்கையர் விரும்பும்
165 Upper Tooting Road Fancy Jewellery
SW17 7TJ-London Tel:0208 68 23 958

எங்கள் நிறுவனத்தின் 17 வது ஆண்டு நிறைவில்
உங்கள் ஆதரவுக்கு நன்றி சொல்லி மகிழ்கின்றோம்!




Travel AIR
www.travelair.de
Tel: 0202/4936921 ,
Fax: 0202/2443106
Tel: 0202/24431 04 - 05
Luisen Str.46 , 42103 Wuppertal

Gopara Gnanam
ஆவணி 13ம் கேவலர்
புனித தேவாலயத்
திருவிழாவில் (13.08.2011)
என்றுமே வரலாறு காணாத மலிவு விற்பனை!
Rheinische Str.81
44137 Dortmund
Germany
Tel: 0231/5450028
Mob: 01713306542

முத்து கடல் மீன்கள்
Fisch&Foods
Germany
Tel: +49 911 97790466
Fax:+49 911 457183
சுவையோ சுவை!!!
Fisch &Food
Karl-Brüger.Str21
90459 Nuernberg.
மொத்தமாகவும
சில்லறையாகவும்
பெற நாடுங்கள்.

ஆடை ஆபரணம்,
அன்றாட மளிகைப்
பொருட்களின்
மாளிகை
Tel:0231 819288

T.T.S.Brothers Asien Supermarkt
உங்கள் உறவுகளுக்கு துரிதமாகப் பணம் அனுப்ப நாடுங்கள்!
யாழ்ப்பாணத்தில் Bank of ceylon, HNB Bank, Comercial bank பணம் பெறலாம்.
RHEINISCHE STR 52
44137 DORTMUND
GARTEN STR-29-48147 MÜNSTER
TEl:0251-2301184 Fax: 0251-2301183
Helmholtz Str.11 -46045 Oberhausen
Tel:0208 202829
Germany

கனீன் எலக்ரோனிக்ஸ்!
தீபம், ஐங்கரன், Sun Tv
புதிய சந்தாவா? புதுப்பித்தலா?
உடன் தொடர்பு கொண்டு இன்றை விலையை
உறுதி செய்யுங்கள்!
உடன் பதிவு செய்யுங்கள். இலாபம் உங்கள் கையில்
கலைவிழாக்களைக் கலைநயத்துடன்
ஒளிப்பதிவு செய்ய
நாடுங்கள்....www.kaneenelectronics.de
Schevenhofer Weg 24,- 42111 Wuppertal
Tel: 0205 3423 740 Germany

அனைத்துலகத் தமிழர்களுக்கு
ஓர் தமிழ்த் தொலைக்காட்சி
ஒரு வருடச்சந்தா 84€ மட்டுமே! U.K இல் 60 பவுண்
ஒரு வருடச்சந்தா புதுப்பிக்க 72€ மட்டுமே! U.K இல் 54 பவுண்
திரைக்குவந்து சில நாட்களேயான புத்தம் புதிய
திரைப்படங்கள்!சின்னத்திரைத் தொடர்கள்!
மனதில் நிற்கும் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள்
உங்கள் கலைஞர் ஐங்கரன் T.V யில் காணுங்கள்!
தொலைபேசி இல. 0044 208 543 43 22
ayngaran.com
கலைஞர் ஐங்கரன்

S.K.Silks & Gold Praadise
டோட்மூண்
நகரில் மாபெரும்
ராஜ முத்திரை!
யேர்மனி - கேவலார் மரியன்னையின்
திருவிழாவில் (13.08.2011)
எமது ஸ்தாபனத்தாரின்
மாபெரும் மலிவு விற்பனை!
பட்டுச்சேலைகள் பஞ்சாபிகள் மற்றும் புதிய புதிய சேலைகள் யாவும்
உங்களை நாகரிக உலகில் அழகு அரசிகளாக பவனிவரப் பணிபுரிபவர்கள்
நாங்கள். நாடுங்கள் நம்மை, நன்மை பல...
என்றும்
புதியது
அழகின்
இரகசியம்
அது.
sk_silks@hotmail.de
Adler str 33 - 44137 Dortmund Tel:0231 9501 647

London's Largest Selections
Jewellers & Silk House
எப்பொழுதும் நியாயமான விலை
புத்தம் புது டிசைன்கள்
Rathy
ரதி



28 Ealing Rd
Wembley
HA0 4TL London
Tel: 02089033063
209 upper tooting Road
tooting sw19 7gt
0208682 2233




மக்களின் மனங்கவர்ந்த ஸ்தாபனம்

Tel.: 0201/236925
Fax: 0201/236928

இலங்கை, இந்திய உப உணவுப் பொருட்கள், மற்றும் கடல் உணவு வகைகள் அனைத்தும் தரமாகவும் மலிவாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

மங்கல வைபவகங்களுக்கு ஏற்ற மணவறைகள் மற்றும் சிறந்த வீடியோ படப்பிடிப்புக்கும் நாடுங்கள்...

பழைய, புதிய திரைப்படங்கள் மற்றும் மனதுக்கினிய திரைப்படப்பாடல்கள் சீடி,அவுடியோ எம்மிடம் கிடைக்கும்

APIRAAMI ENTERPRISE
Pferdemarkt 9
45127 ESSEN



மக்களின் மனங்கவர்ந்த ஸ்தாபனம்

T.R.S Traders



இலங்கை, இந்திய உபஉணவுப் பொருட்கள், மற்றும் கடல் உணவு வகைகள் அனைத்தும் தரமாகவும் மலிவாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

T.R.S Traders
Königswall-16 (Am Hbf)
44137 Dortmund
உரிமையாளர்: P. இராஜேந்திரவரதன்

Tel.: 0231/160 494
Fax: 0231/165 6524




# கடலுக்கு அடியில் சொர்க்க விடுதி



- மாதங்கி

*Lodge in Key Largo, Florida-1970*

எதிலும் முதன் முதலாக ஆரம்பித்தவர்கள் நாமே! என்பதில் ஒரு குஷி இருக்கத்தான் செய்கின்றது. ஆனால் உலகம் போகும் வேகத்தில் முதன் முதலாக என்று சொல்லிக்கொண்டு இருக்கும் போதே பல முதலைகள் விழுங்க வந்துவிடும்.

இருப்பினும் ஒன்றைப் பார்த்து ஒன்றினை உருவாக்குவது சுலபம். தனியாக தன் சுயசிந்தனையில் உருவாக்குவது கடினம். அது கடினமாக இருந்தாலும் அதில் இருக்கும் ஆத்மதிருப்தி வேறு எதிலும் இருப்பதில்லை.

எனவே இன்று பல அழகான விடுதிகள் உலகெங்கும் குறிப்பாக சீனா, மாலதீவு, பிஜிதீவு,தூபாய் என பலநாடு களில் கடலுக்கு அடியில் உருவாக்கப்பட்டு அதிசய உலா வந்தாலும், புளோறிடாவில் உள்ள கடல் ஆய்வு மையம் தான் முதன் முதலில் இந்த சிறுவிடுதியைக் கடலுக்கு அடியில் 1970 களில் அமைத்தது.



அதன் கருவே இன்று விருட்சமாக 12,000 சதுர அடிபரப்பான பாரிய நட்சத்திர விடுதிகளை தண்ணீருக்கு அடியில் அமைக்க ஏதுவானது.

இப்போது கடலடியில் மனிதன் வாழும் ஆறு நட்சத்திர விடுதியை வடிவமைத்துக் கொடுத்துள்ளது அமெரிக்க நிறுவனமொன்று. பிஜி தீவுகளுக்கு அருகாமையில் தனியார் தீவொன்றின் கடலடியில் சுமார் 50 மீட்டர் ஆழத்தில் நீங்கள் காணும் இந்த அழகிய உல்லாசப்பயண விடுதி அமைக்கப்பட்டு உள்ளது. மொத்தம் 40 மில்லியன் டொலர்கள் செலவில் அமைக்கப்பட்ட இந்த ஆடம்பர கடலடி மாளிகையில் நீங்களும் தங்குவதானால் ஒரு நாளைய வாடகை 1500 டொலர்கள் மட்டுமே. கடலடியில் மீன்களைப் பார்த்தபடி வாழும் இந்த இனிய அனுபவத்திற்கு நீங்கள் கொடுக்கும் பணத்தின் ஒவ்வொரு சதமும் பயனுள்ளதாகவே அமையும் என்றும் அறிவித்துள்ளனர்.



பொதுவாக நீர் மூழ்கிக் கப்பலில் இருக்கும்போது கடலடி அமுக்கம் ஒன்று மனிதன் மீது தொழிற்பட்டுக் கொண்டே இருக்கும். அத்தகைய அமுக்கத்தின் பாதிப்பு இதற்குள் வாழ்வோருக்கு ஏற்படாத வகையில் விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.இந்தக் கட்டிடத்தினுள்ளே டெனிஸ் விளையாட்டு மைதானம், கடைகள், நீச்சல் குளம், உணவு விடுதி, தொடர் 3ம் பக்கம்


வெகுவிரைவில்....
யேர்மனி நாட்டில் பீலபெல்ட் நகரில் புதுப்பொலிவுடன் உதயமாகின்றது
Lakshmi Jewellery &Silks
தங்கள் மனங்கவர் டிசைன்களில் தங்க ஆபரணத் தெரிவுகளுக்கும், வண்ண வண்ண நவநாகரீக ஆடைத் தெரிவுகளுக்கும் நினைவில் நிற்க வேண்டிய ஸ்தாபனம்

Lakshmi Jewellery &Silk
Herforder Str.08
33602 Bielefeld
தொலைபேசி: 0179 72 35 729
http://www.lakshmi-jewellerysilks.de









யேர்மனியில் தரம்மிக்க ஓர் மொத்த வியாபார நிலையம்!

StaR - Impex

எம்மிடம் ஆசிய ஆபிரிக்க உணவுப்பொருட்கள் பலசரக்குப் பொருட்கள், கடலுணவு வகைகள் அனைத்தையும் மொத்தமாகவும் மலிவாகவும் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்
StaR Impex
Inh :K.Sivasubramaniam

Öffnungszeiten:
Mo-Fr: 10.30-19.30
Mi: Geschlossen
Sa: 09.30-16.30


Tel.: 0231/8602696
Mobil: 0172/2183703
Fax: 0231/8602698
E-Mail: star-impex@live.de

Franzius str.150
Eingang: kipper str.Tor.3
44147 Dortmund

வெற்றிமணி விழா - டோட்மூண்ட் நகரில் 22.10.2011

வெற்றிமணி

தமிழ் எங்கள் உயிருக்கு மேல்
——————கவிஞர்.வி.க


ஆரம்பம்:1950

ஸ்தாபகர்
அமரர் மு.க.சுப்பிரமணியம்
(முன்னாள் அதிபர்:
குரும்பசிட்டி பொன்.பரமானந்தர்
வித்தியாசாலை)

பிரதம ஆசிரியர்
"ஓவியக்கலைவேள்"
கலாநிதி
மு.க.சு.சிவகுமாரன் B.F.A.

Chief Editor:
Dr.M.K.S.Sivakumaran B.F.A.



Postfach 2765
58477 Lüdenscheid
Germany
Tel&Fax:
02351/45 88 62
0157 88 77 31 56

e-mail: vettimaniy@hotmail.com


QB 830

"வெற்றிமணிமொழி"

தோல்வியைக் கண்டு
அஞ்சுபவர்களிடமிருந்து
வெற்றி தானாகவே
விலகிச்செல்கிறது
அரவிந்தர்


பத்திரிகை வடிவம்
சிவகுமாரன் சஞ்ஜீவன்.B .Eng (Hons)


# கசப்பான காலங்களை மறந்து கண்ணியமான அரசியல் தீர்வு ஒன்றினை எட்டவேண்டும்!

## தேர்தல் முடிவுகள் சொல்லும் பாடம்!

வடக்கில் பல கலாச்சார சீரழிவுகள், கொலைகள் கொள்ளைகள் என எத்தனையோ செய்திகள் எம் காதுக்கு வந்து துன்பத்தைக் கொடுத்தது. தற்போது என்ன இருந்தாலும் நாம் சூடு சுரணையை இழக்கவில்லை என்பதை காட்டும் வண்ணம் தன்னம்பிக்கை தரும் நல்லசெய்தி கிட்டியுள்ளது.

ஜனநாயக விதி முறைகளுக்கு அமைய தமிழர் தம் தீர்ப்பை வழங்கியுள்ளனர். இதனை பெரும்பான்மை இனம் மதித்து, கசப்பான காலங்களை மறந்து நல்ல தீர்வு ஒன்றினை எட்டவேண்டும். இதுவே நாட்டுக்கு இன்று வேண்டியது!

வடக்கில் தமிழருக்கு பெருவெற்றி 18 சபைகளும் கூட்டமைப்பு வசம்! ஈ.பி.டி.பியினருடன் இணைந்து களமிறங்கிய ஆளும் கட்சி தோல்வி (24 யூலை 2011) நேற்று நடைபெற்று முடிந்த உள்ளூராட்சித் தேர்தலில் தமிழர்களுக்குப் பெருவெற்றி கிடைத்துள்ளது. அரச அடக்குமுறைக்கு எதிராக மக்களை வாக்களிக்கக் கோரிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குத் தமது ஏகோபித்த ஆதரவைத் தெரிவித்ததன் மூலம் தமிழர்கள் இந்தப் பெருவெற்றியைப் பெற்றுள்ளார்கள்.

வடக்கில் உள்ள 20 பிரதேச சபைகளில் 18 சபைகளையும் கிழக்கில் அம்பாறை மாவட்டத்தில் நடந்த இரு சபைகளையும்கூட கூட்டமைப்பே கைப்பற்றி உள்ளது. யாழ். மாவட்டத்தில் 3 நகரசபைகளுக்கும் 13 பிரதேச சபைகளுக்கும் கிளிநொச்சியில் 3 பிரதேச சபைகளுக்கும் முல்லைத்தீவில் ஒரு பிரதேச சபைக்கும் தேர்தல் நடத்தப்பட்டது. கிழக்கில் அம்பாறை மாவட்டத்தில் 2 பிரதேச சபைகளுக்கும் வாக்களிப்பு இடம்பெற்றது. திருகோணமலை மாவட்டத்தில் 3 பிரதேச சபைகளுக்கும் தேர்தல் நடைபெற்றது. யாழ். மாவட்டத்தில் 48 சதவீத வாக்களிப்பு இடம்பெற்றது. கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் 65 சதவீத வாக்குகள் பதிவாகி இருந்தன என்று அந்தந்த மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். கிழக்கிலும் 60 சதவீதத்துக்கும் அதிகமான வாக்குப் பதிவு இடம்பெற்றுள்ளது. வன்னியில் சுமார் 30 வருடங்களின் பின்னர் முதல் தடவையாக உள்ளூராட்சித் தேர்தல் நடைபெற்றுள்ளது. படையினரின் கெடுபிடிகள், அச்சுறுத்தல்கள் மற்றும் லஞ்சம் கொடுத்தல் ஆகிய பல முறைப்பாடுகள் பதிவாகி இருந்த நிலையிலும் வாக்காளர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கே தமது பெரும் ஆதரவையும் வழங்கி உள்ளனர். தாயகத்தில் மக்கள் விழிப்பாகவே உள்ளனர். அறிவும் ஆற்றலும் மிக்கதாக தமிழினத்தை கட்டியெழுப்பும் வல்லமை அவர்களிடத்தில் உண்டு.

### கடலுக்கு அடியில் சொர்க்க விடுதி.

2ம் பக்கத் தொடர்ச்சி...

கடலுக்குள்இங்கிருந்து மியாமிக்கு பறக்க விசேட விமான சேவை என்று பல சேவைகள் உள்ளன. அதேபோல கடலடியில் பயணம் செய்யவும் விசேட ஏற்பாடுகள் உள்ளன. அதேவேளை திடீரென ஆபத்து ஏற்பட்டால் தப்புவதற்காக நீரமூழ்கிக் கப்பல்களில் உள்ளதுபோன்ற அத்தனை பாதுகாப்பு ஏற்பாடுகளும் உள்ளன.

தமிழைப் பேசுவதும் தாங்கள் தமிழர்கள் என்ற அடையாளத்தை வெளிப்படுத்துவதும் அவமானத்திற்கு உரிய ஒன்றாக தமிழர்கள் கருதினார்கள். தமிழர்களுக்கு இருந்த தாழ்வு மனப்பான்மை காரணமாக தமிழ் கற்பதில் ஆர்வம் காட்டவில்லை. சரி தமிழர் நிலையைவிட்டு மீண்டும் கடலுக்குள் செல்வோம்.



இப்போது துபாய் நாட்டில் "உலகில் முதன் முதலாக என்ற தோரணையுடன்" கட்டப்பட்டுள்ளது இன்னுமொரு கடலுக்குள் அடியில் அமைந்த ஆறு நட்சத்திர விடுதி. அதன் தோற்றமும் அழகும் மனதைக் கொள்ளை கொள்ளும். உண்மையில் இயற்கை கொஞ்சும் அழகு அரிதான நாடுகளில். செயற்கை அரியணை ஏறி உலகை ஆட்சி செய்யும். இந்த இடத்தில் ஒரு பெருமூச்சு! என்ன இல்லை எங்கள் திருநாட்டில். இயற்கை எழில் கொஞ்சும் நாடல்லவா? மனங்கள் நலமானால் பூங்காற்று வீசாதா?.

### பிஜித் தீவும் தமிழர்களும்!

பிஜித் தீவு என்றதும் அத்தீவிற்கும் தமிழருக்கும் சம்மந்தம் உண்டு என்பதனால் ஒரு சிறு குறிப்பு இங்கு:

பிஜித் தீவில் கரும்பு சாகுபடி செய்வதற்காகப் பீகார், வங்காளம், பஞ்சாப் மற்றும் சென்னை மாகாணங்களிலிருந்து 1879ஆம் ஆண்டு விவசாயத் தொழிலாளர்கள் வரவழைக்கப்பட்டார்கள். பிஜித் தீவு பற்றியோ தாங்கள் எதற்காக அழைத்துச் செல்லப்படுகிறோம் என்பதைப் பற்றியோ எதையும் அறியாதவர்களாக இவர்கள் அங்கே போனார்கள். 1984ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட கணக்குப்படி பிஜி தீவில் 50,000 தமிழர்கள் வாழ்கிறார்கள். இவர்களில் 5,000 பேர்களுக்கு மட்டுமே ஓரளவு தமிழ் எழுதவும் படிக்கவும் தெரியும். மற்றவர்களுக்குத் தமிழ் பேசக் கூடத் தெரியாது. பிஜித் தீவில் உள்ள தமிழ் இளைஞர்களுக்கு தமிழ் தெரியாது. 50 சதவீதத்திற்கு மேற்பட்ட தமிழர் வீடுகளில் தமிழ் பேசப்படவில்லை.

### முற்று முழுதாக மறுக்கின்றோம்!

கடந்த வாரம் நமது தமிழ் மக்கள் Düsseldorf விமான நிலையத்தில் விமானச் சீட்டுக்கள் தவறுதலாக வழங்கப்பட்டதாகவும். அதனால் அவர்கள் பயணம் செய்ய முடியாமல் போனதாகவும், அவர்கள் எம்மிடமே அந்த டிக்கட்டுக்களைப் பெற்றதாகவும், சில பல வதந்திகள் எமது நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்த தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனை நாம் முற்று முழுதாக மறுப்பதோடு எமது 3 ஆண்டு வெற்றியைக் கொண்டாடும் இவ்வேளையில், எமது நற்பெயருக்கு தீங்கு விழைவிப்போர் மீது, அத்தவறான கூற்றினை எதிர்த்து, யேர்மனிய தனி நபர், நிறுவனத்தின் பெயரினைக் கெடுக்கும் வகையில் ஈடுபடுவதற்கான சட்ட நடவடிக்கை அவர்கள் மீது எடுக்கப்படும் என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன். இப்படிக்கு தமிழ்மக்கள் துணையோடு வெற்றியை நோக்கிப் பயணிக்கும்
Century Travels & Tours
நிஷந்தன்


உலகை வலம்வர உங்கள் உற்றதுணை நாங்கள்!
Century Travels & Tours
Europe Special : 99,00€ புகையிரத
Ticket to Paris மற்றும் நாடுகளுக்கும் எம்மிடம்
நேரில் வந்து மட்டுமே பதிவு செய்ய முடியும்.!
தொலைபேசிமூலம் பதிவு செய்ய முடியாது.
München -COLOMBO-München
(விஷேட விலையில்)
email : info@centurytravels.de
Rhenische Strasse 29
44137 Dortmund.Germany
Fax: 0231 5844665
Last Minute Tickets:
02313975643
குறைந்த விலையில்
பயணச்சீட்டுக்கள்
நேரடியாகத்
தொடர்பு கொள்ளுங்கள்!
நேரடித்தொர்பு:
Number: 017621682149
Tel: 0231 5896557,
Tel: 0231 5574319
Ram Nishanthan
Dip.T.T.Mgt-IATA/UFTAA Montreal
017621682149
website : www.centurytravels.de
Mayuran 01772330010

# யார் இந்த மனநோயாளிகள்?

**நிகழ்யா - யாழ்ப்பாணம்**



**யாழ்ப்பாணத்தில் இளம் பெண் தற்கொலை!**

அண்மைக்காலமாக பத்திரிகைகளை எடுத்து பார்த்தால் யாழ்ப்பாணத்தில் இளம் பெண் தற்கொலை. தனக்குதானே தீ மூட்டி தற்கொலை தவறுதலாக தீப்பிடித்து எரிந்துசாவு.

இவ்வாறான செய்திகள் அதிகரித்தே செல் கின்றன். மனநோயால் பாதிக்கப்பட்டவர்களே தற்கொலை செய்ததாக மரணசான்றுகளும் பத்திரிகைகளும் தெரிவிக்கின்றன.

மனநோயால் பெண்கள் மட்டும் தானா தற்கொலை செய்வார்கள்.? மனநோயாளியின் குணவியல்புகள் “தான் என்னசெய்கிறேன் என்ப தனையே அறியாது தன் நிலை மறந்து செயற்படுபவர்கள”. வீதியிலேசெல்லும் மன நோயாளிகள் தம் உடை எங்கு செல்கிறது என்றே தெரியாது செல்கிறார்கள். மனநிலை சரியில்லாதவர் வீதியில் வரும் வாகனத்தில் தவறுதலாக அடிபட்டால் அதை ஏற்றுக் கொள்ளலாம். ஆனால் மனநிலை சரியில்லாதவர் எவ்வாறு தீயிட்டு எரிந்து அல்லது தூக்கிட்டு தற்கொலை செய்து தன்னை தானே அழிக்க முடியும்? இதனை பற்றி சிந்தித்து பார்க்க வேண்டியதாகவே இருக்கிறது. அடுத்து தற்கொலை செய்கிற ஒரு மன நோயாளியை எடுத்துக்கொண்டால், வீட்டிலே யாருமே தூக்கு போட வசதியாக கயிறு, அல்லது சேலையை கட்டி வைப்பதில்லை. அப்படி இருக்கும் போது மனநோயாளி ஒரு கதிரையை அல்லது மேசையை தூக்கி வைத்து அதில் ஏறி தூக்கு சரியாக போட்டு சரியாக அதனுள் தலையை விட்டு தற்கொலை செய்கிறார். அப்படி என்றால் மனநோயாளிக்கு மூளை வேலை செய்கிறது என்று தானேஅர்த்தம். அதே மாதிரி தீயிட்டு தற்கொலை செய்கிற ஒருவர் மண்ணெண் ணெய் எடுத்து அதனை தன் மேல் ஊற்றி தீப்பெட்டி எடுத்து அதனை கொழுத்தி எரிகிறார். வீட்டிலே எத்தனையோ பொருட்கள் இருக்கும் போது எப்படி சரியாகதீப் பெட்டி எடுத்து தட்டி தீயிட்டு எரிய முடிகிறது..?

“சொல்லுகிறவர்கள் சொன்னால் கேட்பவுர்கள் கேட்பார்கள்” என்று இதை தான் சொல்லுவார்கள் போல. இவ்வாறு தற்கொலை செய்த மனநோயாளிகள் யார்..?

(1) பத்து பதினைந்து வயதினிலே கல்வியை இடைநிறுத்தி காதல் என்ற பெயரிலேதம் கல்வியை விட்டு காதலனுடன் வீட்டை விட்டி ஓடி திருமணம் செய்தவர்கள். தம் குடும்பத்தை சரிவர நடாத்த வசதியற்று வறுமையினால் கணவன் மனைவிக்கு இடையில் ஏற்படும் சண்டைகள் நாளடைவில் விரிவடைந்து கணவன் மனைவி மீது பெற்றோலை ஊற்றி தீயிட்டு கொழுத்துகிறான். மனைவி இறந்த பின் எம் பிள்ளையே எமக்கில்லை என்றாகி விட்டது இனி இவனை காட்டி கொடுப்பான் என்று நினைத்து அவனை அப்படியே விட்டு விடுகிறார்கள். அதாவது ஒரு கொலையாளியை உலாவ விடுகிறார்கள். (2) காதல் வலையிலே வீழ்ந்து வயிற்றிலே பிள்ளையை வாங்கி கொண்டு கணவனால் கைவிடப்பட்ட நிலையில் தம்மால் பிள்ளையை காப்பாற்ற முடியாது என்ற நிலையில்தம்மை தாமே அழித்துக் கொள் கிறார்கள். (3) ஆசை அறுபது நாள் மோகம் முப்பது நாள் என்பது போல காதலித்து திருமணம்செய்த பின்பு தன் மனைவியை விட அழகான அல்லது வசதியான ஒரு பெண்ணின் தொடர்பு ஏற்பட்டு அந்த விடயம் மனைவிக்கு தெரிந்து பிரச்னை ஏற்படும் போது கணவன் மனைவியை கொலை செய்து தற்கொலையாக மாற்றுகிறான். (4) தற்போதைய தொழினுட்ப வளர்ச்சியினால் தாம் என்ன செய்கிறோம் என்று தெரியாமல் தெரிந்தவர்கள் தெரியாதவர்கள் என்று பாகுபாடு இன்றி அவர்களுக்கு அழைப்பினை மேற்கொண்டு பொழுது போக்கு பவர்கள்.

அது உண்மையிலே இன்று மனநோயாளிகள் செய்யும் வேலை தான். படித்தவர்களும் சரி படிக்காதவர்களும் சரி, தமக்கு தெரிந்தவர் களுக்கு அநாகரீகமாக அழைப்பை ஏற்படுத்தி உரையாடுகின்றனர். மறுமுனையில் அழைப்பை ஏற்படுத்தியவரிடம் சரியான தகவல்களைகேட்க முற்படும்போது அவற்றை வழங்கமாட்டார்கள். அழைப்பை தேவையற்று மேற்கொள்ள வேண்டாம் என்று எத்தனை தடவை வலியுறத்தினாலும் அதனை கேட்காது தொல்லை கொடுப்பார்கள். அதனை நிறுத்த சட்டப்படி நடவடிக்கை எடுக்கமுற்படும்போது தமக்கு எற்படும் அவ மானத்தை நினைத்து தற்கொலை செய்து கொள்கிறார்கள்.

மனநோய் குறுகிய காலத்தில் ஏற்படுமா.? காலையில் குடும்பத்தாருடன் சமைத்து சாப்பிட்டு கொண்டு இருந்த பெண் மாலையில் தற்கொலை செய்கிறார். காலையில் சரியாக சமைத்த வருக்கு மாலையில் மன நோய் ஏற்படுமா? ஒரு அலுவலகத்தில் பணியாற்றுகின்ற பெண் காலையில் நலமாக கதைத்து வீதியிலே உலாவி தனக்கு தெரிந்தவர்களை கண்டு கதைத்த வருக்கு மாலைக்கு இடையில் மனநோய் வருமா? (இவ்வாறு நடைபெறுமாயின் திடீர் மனநோ யாளர்கள் கவனம் என்றும் நாம்யாருடனும் பேசும் போதும் அவதானமாக அல்லவா இருக்கவேண்டும். அவர்களுக்கு மனநோய் எப்போது வரும் என்று யாரறிவார்)

மனநோய் பட்டம் யாரால் வழங்கப்படுகிறது?தன் பிள்ளை தற்கொலை செய்து இறந்துவிட்டாள் என்ற உடனேயே தம் பிள்ளையின் மானமும் தம் குடும்பத்துக்கு ஏற்பட போகும் அவமானத்தையும் பெற்றோரோ அல்லது அவளது குடும்பத்தை சார்ந்தவர்களோ தமது பிள்ளைக்கு வழங்கும் பட்டமே மனநோய்.

எமது பிள்ளையே இல்லை இனி நாம் ஏன் எமது பிள்ளை பற்றி ஏனையோருக்கு தெரியப் படுத்துவான் என்று அவர்கள் வழங்கும் பட்டமே. தற்கொலை.

நடந்த இடத்துக்கு பத்திரிகையாளர்கள் சென்ற உடன், வீட்டில் இருப்பவர்கள் தெரிவிக்கும் காரணம் இது. “எனது பிள்ளை சிறிது காலமாக மனநோயால் பாதிக்கப்பட்டு இருந்தாள்” வீட்டிலே யாரும் இல்லாத வேளை தற்கொலை செய்துகொண்டாள்.

இதனை கேட்கும் பத்திரிகையாளர்களும் அதனை அப்படியே வெளியிடுகிறார்கள். இறந்தவர்களது வீட்டினர் பத்திரிகையாளர்களையும் பொது மக்களையும் தாம் முட்டாளாக்கி விட்டதாக எண்ணுகிறார்கள். அவர்கள் முன் ஆம் எனதலையாட்டுபவர்களுக்கு உண்மை நிலை தெரியாமல் இல்லை. தெரிந்தும் ஊமையாக இருக்கிறார்கள். அது எவ்வாறு இவர்கள் வீட்டிலே யாரும் இல்லாத போது தற்கொலை செய்து கொள்கிறார்கள்? மனநோயாளிக்கு கூட தெரிகிறது வீட்டிலே யாரும் இல்லாத போதுதான் நாம் கதவை பூட்டி போட்டு தற்கொலை செய்ய வேண்டும் என்று. ஒரு நிமிடம் சிந்தியுங்கள். தற்கொலை செய்ததாக கூறப்படும் மனநோயாளிகள் இதுவரை ஏதாவது வைத்தியசாலையில் மருந்து அல்லது சிகிச்சை பெற்றதற்கானசான்றுகள் வைத்திருக்கிறார்களா? நோய் வந்தவர்கள் எப்படியாவது வைத்தி யசாலையை நாடி இருப்பார்கள். இறந்தவர்களின் உறவினர்களிடம் இறந்தவர் மனநோயாளி தான் என்பதற்கான வைத்தியசாலையால் உறுதிப் படுத்திய சான்றுகள்வைத்திருக்கிறார்களா?

(இவ்வாறான செய்திகளை வெளியிடும் போது உண்மை நிலையை அறிய முற்படுங்கள். இது தானாம் உண்மை பேப்பரில் சும்மா அவங்கள் போட்டிருக்கிறாங்கள் என்று வாசகர்கள் கருத்து வெளியிடும் நிலமைக்கு ஆளாகிவிடாதீர்கள்)



**இதற்கு காரணம் யார்?** தம் பிள்ளைகள் என்ன செய்கிறார்கள் ஏது செய்கிறார்கள் என்று தெரியாமல் அவர்கள் போக்கிலே அவர்களை செயற்பட விடுகிறார்கள். தன் பிள்ளை இன்னொரு ஆணுடன் சேர்ந்து திரிவதை பார்த்தும் கூட அது அவனின் நண்பன் என்று கூறி அவர்கள் சேர்ந்து திரிய இவர்களே சந்தர்ப்பத்தை ஏற்படுத்தி கொடுக்கிறார்கள். இவற்றின் விளைவே இவ்வாறான தேவையற்ற செயல்களை செய்யதூண்டும். அதன் பலன்களே இந்த தற்கொலைகள் பெண்களே! நீங்கள் பெண்ணின் பெருமைகளைப் பேணுங்கள். மற்றவர்கள் போற்றக் கூடியதாக வாழுங்கள்.

ஸ்ரீ வீராட் விஸ்வ குலபிரமனே நமக! வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் துணை

**E.S.T.M Jewellery & Schmuck**



நவீன உயர்தர டிசைன்களில் நகைகள், திருமண ஆபரணங்கள், ஓடர் நகைகள், திருத்த வேலைகள், யாவும் செய்து கொடுக்கப்படும். தாலிக்குப் பொன்னுருக்குதல், காது மூக்குக்குத்துதல் போன்ற நல்ல காரியங்களும் செய்து கொடுக்கப்படும். பழைய நகைகளுக்குப் பதிலாக சிங்கப்பூர் நகைகள் மாற்றிக் கொடுக்கப்படும்.




Rheinische Str.73
44137 Dortmund

0231 1899023
Handy:01633642642

உரிமையாளர்:
சின்னத்துரை தயாகரன்



**Asijah**

Gruttostraat 25
9291 BC Kollum
Nederland

Sujan Singarajah
Tel: 0511: 45 11 83
sujan@chello.nl Mob: 06 20 23 53 72
Fax: 0847: 13 49 53 info@asijah.com

கோலன்ட், பெல்ஜியம், யேர்மனி நாடுகளில் மொத்த வியாபாரச் சேவை!






# பமுகல பளிங்கு மலையும் வெந்நீரூற்றுக்களும்!








## கிளியோபாத்ராக்கும் காதல் வந்ததால் இதயநோய் வந்திருக்கலாம்?

துருக்கி நாட்டில் மெண்டிரஸ் நதிப்பள்ளத்தாக்கு தான் (Pamukkale) பமுகலவின் அமைவிடம். இது டினிஸில் மாகாணத்தில் அமைந்துள்ளது.
மலையின் உச்சியில் முகில்கூட்டங்கள் உறங்குவதையும், பனி உறைவதையும் கண்டிருக்கின்றோம். அதனால் மலை வெண்மலையாக காட்சிதருவதுண்டு. இங்கு பனியும் இல்லை, முகிலும் இல்லை. மலையுச்சியிலும் இல்லை, மலை அடிவாரத்தில் இருந்து சரியாக 100 மீற்றர் உயரத்தில் பஞ்சுபோல் வெள்ளை நிறப்பளிங்குகள் படர்ந்து இருக்கின்றன. ஆம் இது பஞ்மலை அல்ல, பமுகல மலை எனப் பெயர். ஐஸ்கட்டிகள் போன்றே தோற்றமளிக்கும்.
இலங்கையில் படிக்கட்டு பயிர்செய்கை மலையகத்தில் உள்ளது போன்ற வடிவமைப்பில், இங்கு இயற்கை செய்த படிக்கட்டு இந்த பமுகலை. ஒவ்வொரு படிக்கட்டும் வெண்மையாக மக்னீசியம் படிந்திருக்கும். இதற்கு காரணம் அங்கு உள்ள வெந்நீரூற்று.



எப்போதுமே நீரின் வெப்பநிலை 35 பாகையிலிருந்து 100 பாகை செல்சியஸ் வரை காணப்படும். இதன் நீர் சுண்ணாம்புக் கலவையை அதிகளவில் கொண்டிருப்பதால், நீர் பாய்ந்து வரும் பகுதிகளில் “செடிமென்ரரி“ என்றழைக்கப்படும் பாறைகள் உருவாகின்றன.
இலங்கையிலும் திருகோணமலையில் வெந்நீரூற்று உண்டு. இருந்தாலும் பமகல வெந்நீரூற்று மிகவும் பிரசித்தி வாய்ந்தது. உலகிலேயே இது ஒன்று தான் அற்புத வெந்நீரூற்றாக இன்றும் திகழ்கின்றது. இது யுனஸ்கோ அமைப்பினால் பாதுகாக்கப்படும் பரம்பரைச் சொத்தாக அறிவிக்கப்பட்டுள்ளது.
இவ்வெந்நீரூற்று 2700மீ உயரமும் 600மீ அகலமும் 160மீ உயரமும் கொண்டது. இதிலிருந்து தூய வெந்நீர் வெளியேறுகின்றது. பார்ப்பதற்கு பழுப்பு நிறத்தில் காணப்படும் இது, கல்சியம் காபனை அதிகளவு கொண்டிருப்பது சிறப்பம்சம்.
குழந்தைகள் காணததைக் கண்டால் எப்படி ஆனந்தத்துடன் ஓடித்திரிவார்களோ அதுபோல் குழந்தைகள் முதல் குமரிகள் வரை இளையவர் முதல் முதியவர் வரை அந்த பளிங்கு மலையில் ஒரே கும்மாளம் தான். ஒவ்வொரு படிக்கட்டிலும் நின்று படம் எடுப்போருக்கும் பார்த்து இரசிப்போருக்கும் அந்தப் பஞ்சுமலையில் பஞ்சமேயில்லை.
இடையிடையே விசில் சத்தம் கேட்டபடி இருக்கும். ஆம் காவலர்களின் விசிலடிகள் அவை. எதோ பஞ்சு மலையில் இருந்து பள்ளத்தாக்கில் விழுந்துவிடுவீர்கள், அதனால் விளிம்பு வரை நடக்காதீர்கள், என்பதற்கான எச்சரிக்கை விசில் என்று ஏமாந்து விடாதீர்கள். அந்த விசிலடியின் அர்த்தம், பஞ்சுமலைத் தரையை உங்கள் பாத அணிகளால் உரசிக் காயப்படுத்தாதீர்கள்! பாத அணிகளுடன் நடக்கதீர்கள் என்பதற்கான எச்சரிக்கை விசில்தான் அது. ஆம் அப்பகுதிகளில் பாத அணியுடன் செல்வது தடை செய்யப்பட்டுள்ளது.
நோய்களைக் குணமாக்கும் வல்லமை
மேலும் பமகல, 17 வகையான நீரூற்றுக்களைக் கொண்டுள்ளது. இவை அனைத்தும் வெவ்வேறு வகையான வெப்பநிலையைக் கொண்டவை. அதனால் வெந்நீரூற்று வெப்பம் தணிக்கப்பட்டு மக்கள் பாவனைக்காக விடப்பட்டுள்ளது. இந்த நீரில் மக்னீசியம், கல்சியம் போன்று இன்னும் பல கனியுப்புக்கள் நிறைவாக உள்ள. அதனால் அங்கு குளித்தால் பல நோய்கள் குணமாக வாய்ப்புள்ளதாக ஆராய்ச்சியாளர்கள் தமது ஆய்வில் தெரிவித்துள்ளனர்.
இதய நோய்கள், குருதிச்சுற்றோட்டப் பிரச்சினைகள், உயர்குருதி அமுக்கம், நரம்பு சார்பான நோய்கள், (ஆதரட்டிஸ்) வாத நோய்கள், கண் மற்றும் தோல் சார்ந்த நோய்கள், உடல் களைப்பு, மன உளைச்சல், சமிபாட்டுப் பிரச்சினைகள் ஆகியவற்றைக் குணமாக்கக் கூடிய சக்தி இவ்வெந்நீரூற்றுக்கு உண்டு. இதனால் அங்கு தினம் குளியலுக்கு பஞ்சமில்லை. உல்லாசப் பயணிகள் ஒரு நாள் குளித்துவிட்டு மறுநாள் நோய் குணமாகவில்லை என்று புலம்பினால் அது முறையல்ல. மருந்தும் கூட ஒரு முறையுடன் குணமாக்கவல்லதா? எனவே தினமும் குளித்தாலே மேற்சொன்ன பலன் கிட்ட வாய்ப்பிருக்கும்.
இந்த வெந்நீரூற்று ஓடையில் அன்று எகிப்து நாட்டின் அழகு தேவதை கிளியோபாத்ரா வந்து நீராடியதாகவும் சொல்லப்படுகின்றது. அதனால் அத்தடாகத்திற்கு கிளியோபாத்ராவின் பெயர் கொண்டுள்ளது. (Pools of Cleopatral) தேவதைக்கும் மன உளைச்சல், இதய நோய்கள் காதல் வயப்பட்டதால் (ஆண்டனி) வந்திருக்கலாம் அல்லவா?
மொத்தத்தில் பமகல பஞ்சுமலையும், வெந்நீரூற்று மனதை மென் சூட்டில் என்றும் வைத்துக்கொள்ளும் வல்லமை படைத்தவைதான்.


**கலைவிளக்கின் 25 வயதினிலே!**
www.kalaivilakku.net
குறும்படங்கள் திரையில்...
(உடன் அனுப்பி வையுங்கள் தரமானதாயின் ஒளிபரப்பப்படும்)
நாடகம் : பார்வைகள்
ஐ.நா.சபையும் தமிழர்களும்
எதிர்காலத்தில் நாம் என்ன...
கலைவிளக்கில் நினைவில்...
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
டோட்முண்ட் நகரில்....
25.09.2011
ஞாயிற்றுக்கிழமை
மாலை.4.00

**Tee Kaffee Und Mehr**
குத்தரிசி பொன்னி அரிசி சிவப்புப்பச்சை பசுஸ்மதி அரிசி வறுத்த அரிசிமா மைசூர்பருப்பு
மொத்தமாகவும் சில்லறையாகவும் கிடைக்கும். மற்றும் மளிகைப் பொருட்களுக்கும் நாடுங்கள்

Jokob str 55 , 59494 Soest
Tel& Fax:02921-33403

**Nirubagini Magendiran**
மொழிபெயர்ப்பாளர்
தமிழ் - யேர்மன்
யேர்மன் - தமிழ்
Vereidigte Dolmetscherin und ermächtigte Übersetzerin
Tamil- Deutsch -Deutsch- Tamil
Tel: 0176/ 24012135
Email: nirumagendiran@hotmail.com

# எங்கள் பிதாமகர்

பேராசிரியர் அ. சண்முகதாஸ



அமரர் பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி

புதன்கிழமை (06.07.2011) இரவு ஒன்பது மணியளவில் நண்பர் க. குமரன் தொலை பேசியில் பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி 8.55 அளவில் காலமாகிவிட்டார் என்று கூறினார். மனோன்மணிக்கும் எனக்கும் இது எதிர்பார்த் திருந்த ஒரு செய்திதான். கடந்த 20ஆம் திகதி அவரைச் சென்று பார்த்தோம். அப்பொழுது அவர் தன்னுடைய உயர் பயணத்துக்கு ஆயத்தமாகத் தன்னைத் தயார்ப்படுத்திக் கொள்ளுவதாகக் கூறினார். கண்கள் கலங்கின. முற்றான பிரிவு என்பது மனிதர்களாகிய எம்மால் தாங்கமுடியாதது. பிரிந்தவர் சாதாரண ஆள் அல்ல. உலகப் புகழ்பெற்ற ஒரு தமிழ் அறிஞர்.

## "டேய் உனக்கு சிவத்தம்பி பிறந்திட்டானடா!"

1932ஆம் ஆண்டு வைகாசி மாதம் 10ஆம் நாளன்று இவர் கரவெட்டியில் பிறந்தார். இவர் பிறக்கும் நாளன்று இவருடைய தந்தையார் யோகர் சுவாமிகளைப் பாரக்கச் சென்றிருந்தார். தந்தையார் பண்டிதர் கார்த்திகேசு சுவாமி களிடம் சென்றபோது அவர் "டேய்! உனக்குச் சிவத்தம்பி பிறந்திட்டானடா. இங்கை என்ன செய்யறாய். ஓடு வீட்ட." என்று கலைத்தாராம். சிவத்தம்பியின் பெயர் வரலாறு இது.

கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரியிலும் கொழும்பு ஸாகிராக் கல்லூரியிலும் கல்வி கற்று இலங்கைப் பல்கலைக் கழகத்திலே கலை மாணிப் பட்டத்தினையும் முதுமாணிப் பட்டத்தி னையும் பெற்றார். ஐக்கிய இராச்சியத்தில் பர்மிங்காம் பல்கலைக் கழகத்தில் உலகப் புகழ்பெற்ற பேராசிரியர் தொம்சனுடைய வழி காட்டலிலே கலாநிதிப் பட்டம் பெற்றார்.

வித்தியோதயப் பல்கலைக் கழகத்திலும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் பணி செய்து தகைசார் வாழ்நாட் பேராசிரியராக ஓய்வு பெற்றார். சுவீடன் உப்சாலாப் பல்கலைக் கழகத்திலும் கேம்பிறிட்ஜ் பல்கலைக் கழகத்திலும் புதடில்லி ஜவர்கல்லால் நேரு பல்கலைக் கழகத்திலும் விரிவுரைகள் ஆற்றினார். தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகம் அவரை உயர் ஆய்வுப் புலமையாளராக அழைத்துச் சிறப்புச்செய்தது. அவருக்குக் கிடைத்த புலமை விருதுகள், பரிசில்கள் பல. தமிழ் இலக்கியம், தமிழர் பண்பாடு, தமிழ் இலக்கிய விமரிசனம் தமிழ் நாடகம் பற்றி உலகில் எங்கெல்லாம் ஆய்வுகள் நடை பெறுகின்றனவோ அங்கெல்லாம் பேசும் பொருளாகப் பேராசிரியர் காரத்திகேசு சிவத்தம்பி யினுடைய எழுத்துப்பணியும் உடனிருக்கும். இத்தகைய உலகப் புகழுடன் எங்களுடன் வாழ்ந்துகொண்டிருந்தவர் பேராசிரியர் சிவத்தம்பி. இவர் எங்கள் பிதாமகர்.

இவரிடம் கற்ற மாணவர்களும் கற்காத மாணவர்களும் இவரைத் தங்கள் ஆசிரியராகக் கொள்ளும் வழக்கம் உண்டு. வித்தியோதயப் பல்கலைக் கழகத்திலும் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திலும் இவரிடம் கற்றவர்கள் இருக்கின்றனர். ஆனால் பேராசிரியர் மௌன குருவோ, சுந்தரம் டிவகலாலாவோ, க. சண்முகலிங்கமோ, கலாநிதி தணிகாசலம் பிள்ளையோ, கலாநிதி மனோன்மணியோ, நானோ அவரிடம் கற்றதில்லை. நாங்கள் எல்லோருமே பேராதனைப் பல்கலைக் கழகத்தில் படித்தவர்கள்; பேராசிரியர் கைலாசபதியிடம் கற்றவர்கள். எனினும் நாங்கள் எல்லோருமே பேராசிரியர் சிவத்தம்பியினை எங்கள் ஆசிரியராக நினைந்து வருகிறோம். இது கற்றறிந்த பேரறிஞர்களுக்குக் கிடைக்கக்கூடிய வாய்ப் பாகும். இதனாலேதான் இவரை "எங்கள் பிதாமகர்'' என்று குறிப்பிடுகிறோம்.. ஆனால் "எங்கள் பிதாமகரைத்'' தமிழ்நாட்டிலுள்ள சிலரும் தங்கள் பிதாமகராகக் கொள்ளும் சிறப்புத்தான் பேராசிரியர் சிவத்தம்பியின் உயர் சிறப்பாக அமைகின்றது. நாம் திசைநோக்கித் தொழுகின்ற வழக்கமடையவர்களல்லவா? "எந்தரோ மஹானு பாவுலு அந்தரீக்கு வந்தனமு'' சொல்லும் மரபுடையவர்கள் நாம். இதிலிருந்து பேராசிரியர் சிவத்தம்பியும் தப்பமுடியாது. இப்பொழுது விண்ணை நோக்கித்தான் நாம் அவரைத் தொழவேண்டியுள்ளது.

பேராசிரியர் சிவத்தம்பியின் பலம் இருந்தபடி இருந்ததுதான். கல்லடிகள் போன்று எத்தனை சொல்லடிகள் விழுந்தாலும் இருந்தபடி இருக்கின்றமை எல்லோராலும் முடியாது.

"காய்த்தமரம் ஆதலினால்
கல்லெறிகள் பட்டவன்றீ
கல்லால் எறிந்தவர்க்கும்
கனிகொடுத்த பழமரம்றீ''

என்று இவருடய மாணவன் பேராசிரியர் சிவலிங்கராஜா தன்னுடைய ஈழத்து இலக்கியச் செல்நெறிகள் என்னும் நூலைப் பேராசிரியருக்குக் காணிக்கையாக்கி எழுதிய கவிதைதான் இச்சந்தர்ப்பத்தில் என்னுடைய நினைவுக்கு வருகின்றது. இவருடைய இருப்பை அசைக்கப் பலர் முயன்றுள்ளமை சில வேளை வெளி யுலகுக்குத் தெரியாமல் இருக்கலாம்.

இவற்றுக்கு மேலாக நின்று ஒளிர்பவர்கள்தான் பேரறிஞர்கள். "கல்லாநிதிகள்'' என்று சொன்ன வர்களின் வாய்கள்தான் வெந்தனவேயொழிய, கலாநிதிகள் என்றும் கலாநிதிகளாக இருந்து வருவதற்கு உலகம் இன்றும் சாட்சியாக இருந்துவருகின்றது.

பேராசிரியர் சிவத்தம்பியின் புலமையின் அடிநாதம் வரலாற்றுணர்வும் மரபின் பல்வேறு நெளிவு சுளிவுகளை நன்கு இனங்கண்டிருப்பதுமாகும். எந்த விடயத்தை எடுத்து ஆய்வு செய்தாலும் வரலாற்றுணர்வும் மரபின் போக்கும் அந்த ஆய்வினை வழிநடத்திச்செல்வனவாக அமை வதைக் காணக்கூடியதாக இருக்கும். இவற்றுக் குப் பக்கத் துணையாக அமைவது அவர் கையாளும் சொற்களும் சொற்றொடர்களும். தமிழ் நாட்டு இளைஞர்கள் பலர் இவருடைய ஆய்விலே ஈடுபாடு கொண்டமைக்கு இவர் கையாண்ட புதுமையான ஆனால் பொருத்தமான கலைச்சொற்களேயாகும். பேராசிரியருடைய சொற்புனைவு அவருடைய எழுத்துக்களுக்குக் கனதியைக் கொடுத்தது.

பேராசிரியருடைய ஆய்வு வழிகாட்டலிலே கலாநிதிப் பட்டம் பெற்றவர்கள் பேராசிரியர் சி. மௌனகுரு, அமரர் கலாநிதி காரை எஸ். சுந்தரம்பிள்ளை, பேராயர் கலாநிதி எஸ். ஜெபநேசன், கலாநிதி அம்மன்கிளி முருகதாஸ், கலாநிதி செ. யோகராசா, கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் ஆகியோராவர். ஆய்வுக்குரிய வாசிப்பிலே ஆய்வு மாணவர்களைப் பேராசிரியர் எப்பொழுதுமே வழிநடத்துவார். இந்த வழிநடத்திலில் இடையிலே திசைமாறிப் போவோரு முண்டு. அவர்கள் நீண்ட தூரம் சென்று திரும்புவதுண்டு. பேராசிரியர் தமிழ்நாட்டுக்குச் செல்லும்போது அங்கு பெருந்தொகையான ஆய்வு மாணவர்கள் அவரை எதிர்பார்த்துக் காத்திருப்பர். இது எல்லோருக்கும் கிடைக்கக்கூடியதொன்றல்ல. அங்குள்ள பல்கலைக் கழகங்களிலிருந்து வரும் முனைவர் ஆய்வேடுகளுக்குத் தேர்வாளராக இருப்பதால் பேராசிரியரை அவ்வாய்வாளர்கள் எவ்வாறு பயன்படுத்தியுள்ளனர் என்பதை நான் அறியக்கூடியதாயிருந்தது. பழமரத்தை நாடிநிற்கும் பறவைகளைப் போல அம்மாணவர்கள் இவர் வரவைக் காத்திருப்பதையும் இவரிடம் தங்கள் ஐயங்களைக் கேட்டுத் தெளிவடைதையும் நான் நேரிலே கண்டுள்ளேன்.

பேராசிரியர் சிவத்தம்பிக்கு வாய்ப்பாக இருந்தவை அவருக்கிருந்த கொம்யுனிஸ்ட் கட்சிச் சார்பு, ஆங்கில-சிங்களமொழிப் புலமை. கொம்யுனிஸ்ட் கட்சிச் சார்பு அவர் எழுத்துக்குச் சித்தாந்தத்தை நல்கியது. அதனுடன் ஒரு பரந்துபட்ட நண்பர் கூட்டத்தைக் கொடுத்தது. சிங்களமொழியறிவு இதற்கு மேலும் உதவியது. ஆங்கில மொழியறிவு அவரை உலகறியவைத்தது. கருத்துக்கள் உதிரிகளாக இருப்பின் விளங்கிக் கொள்வது இலகுவாயிராது. அவை ஒரு சித்தாந்தப் பின்புலம் கொண்டவையாயின் மிக இலகுவாக விளங்கிக் கொள்ள முடியும். இதுதான் அவருடைய எழுத்துக்களுக்கு மிகுந்த மதிப்புக்கிடைக்கக் காரணமாயிற்று. இத்தகைய அறிஞரை நாம் இழந்துநிற்கிறோம். உலகத் தமிழ் அறிஞர்கள் அன்னாரது இழப்பினால் மிகுந்த துயரத்தில் இப்பொழுது ஆழ்ந்திருப்பார்கள். அவருடைய குடும்பத்தினர்க்கு நாம் ஆறுதல் கூறமுடியாது. அவருடைய ஆன்மா அவருடைய குல தெய்வமாகிய சன்னதி முருகனின் அடிகளிலே அமைதியுற்றிருக்கு மென்பதில் ஐயமில்லை.

**அவர் கனவை நனவாக்கிய வெற்றிமணி**

கடந்த 2008 ஆண்டு வெற்றிமணி விழா யேர்மனியில் நடைபெற்ற வேளை திருமதி வலன்ரீனா இளங்கோவன் எழுதிய யாழ்ப்பாணத்து நாட்டிய மரபுகள் (சின்மேளம் உட்பட வரலாறு) என்ற நூலினை வெளியிட்டு தமிழ் உலகிற்கு சேவை செய்வேண்டும் என்று வெற்றிமணியைக் கேட்டுக்கொண்டார். அவர் ஆசியுரையுடன் குறுகிய காலத்தில் நூலினைத் தயாரித்து வெளியிட்டோம். அவரது ஆசையை நிறைவேற்றிய மனநிறைவு வெற்றிமணிக்கு என்றும் உண்டு.

Dortmund நகரில் புதுப்பொலிவுடன் Zum Elefanten




சலரோக நோய்க்கு மருந்துபோல்...
சிறந்த அரிசி!
10 கிலோ.5.95 யூரோ
20.கிலோ10.00 யூரோ
குரக்கன் அரிசி 1.கிலோ 1.95யூரோ
உடன் நாடுங்கள்


வட இந்திய உணவு வகைளைச் சுவைத்து மகிழ ஓர் உணவகம்!

Rheinische Str,20
44137 Dortmund
Tel:0231/ 47 45 76 58-0231 47 45 76 60

Sujan Video & Theepan Photography

லண்டன்- யேர்மனி கலைஞர்களின் ஒருங்கிணைந்த சேவை!

மங்கள வைபவங்கள கலை விழாக்கள அரங்கேற்றமா உயர் தரத்தில் படங்களும் கலை அழகுடன் ஒளிப்பதிவும் செய்து தரப்படும்.




Tel:+49/6841 - 78896
Homburg/Saar (Nathan)
Tel:+44/78- 59194936
London (Theepan)
Tel:+49/179-5464903
Dortmund & Bonn (Sujeethan)
email: sujan_theepan@hotmail.com

Visit us on facebook: Sujan Theepan



# நினைத்தால் சிரிப்பு வரும் (இவர்) சமயத்திலே!



## நடிகை ரஞ்சிதாவையும் அந்தரத்தில் மிதக்க வைப்பேன் என்றார்!

### ஆசிரமத்தில் சுவாமி நித்தியானந்தா நடத்திக் காட்டிய வித்தை

ரஞ்சிதாவுடன் நித்தியானந்தா நெருக்கமாக இருந்த காட்சிகள் உலகம் முழுவதும் பத்திரிகைகள் மற்றும் தொலைக்காட்சிகளில் வெளியானதால் நித்தி யானந்தாவின் உண்மையான முகம் மக்களிடம் அம்பலம் ஆகி இருந்தது.

நித்தியானந்தா கர்நாடக பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பிணையில் வெளியே வந்து இருக்கிறார். ரஞ்சிதா அது வரை காலமும் தலை மறைவாகி இருந்தார். மக்களிடம் மதிப்பிழந்த நித்தியானந்தா அண்மையில் சென்னை வந்து ரஞ்சிதாவுடன் ஊடகவியலாளர் மாநாடு நடத் தினார். செய்தி நிறுவனங்கள் மீது பொய் மூட்டைகளை அவிழ்த்து விட்டார்.

இவரது ஆசிரமத்தில் கடந்த 15 ஆம் திகதி குரு பூர்ணிமா பூஜை நடந்தது. வெகு விமரிசையாக கொண்டாடினார் நித்தியானந்தா. ரஞ்சிதா உட்பட ஏராளமான பக்தர்கள், வெளிநாட்டு சீடர்கள் அவரை சுற்றி அமர்ந்து இருந்தனர். ஒரு வித்தை புரியப் போகின்றார் என்று அப்போது நித்தியானந்தா அறிவித்தார். குண்டலினி சக்தி மூலம் புவி ஈர்ப்பு விசைக்கு எதிராக பக்தர்களை அந்தரத்தில் மிதக்க வைக்க போகிறார் என்றார்.

அந்தரத்தில் மிதக்கின்றமை சிறிய விடயம், வெற்றுக் காசோலை கொடுத்து ஏழையை பணக்காரனாக்குகின்றமை போன்றதுதான் அது, குண்டலினியில் ஈடுபட்டு இச்சக்தியை பக்தர்கள் அடைகின்றமைக்குள் வயதாகி விடும். அதனால் பக்தர்களின் குண்டலினி சக்தியை உடனடியாக எழுப்பிக் காட்டப் போகின்றார் என்றார். சவால் விடும் தோரணையில் அறிவித்தார்.

இதை அடுத்து ரஞ்சிதா உட்பட பக்தர்கள் அனைவரும் அந்தரத்தில் மிதக்க தயாராயினர். சிம்மாசனத்தில் அமர்ந்து கையில் வாள், கேடயம் போன்றவற்றை வைத்துக் கொண்டு நித்தி யானந்தா ஏதோ மந்திரம் முணு முணுத்தார். பிறகு வாயை குவித்து காற்றை ஊதினார். நடக்கட்டும் என்பது போல் கைகளை அசைத்தார். எல்லோரையும் குதிக்க சொன்னார்.

குதித்து கொண்டே இருக்கின்றபோது ஒரு கட்டத்தில் சர்ரென மேலே எழும்பி அந்தரத்தில் மிதக்கலாம் என்றார். இதை அடுத்து எல்லோரும் சப்பாணி கொட்டி உட்கார்ந்தபடியே குதிக்க தொடங்கினர். விநோத ஒலிகளை எழுப்பிய வண்ணம் குதித்தனர். இக்காட்சி ஒரே நேரத்தில் ஏராளமான தவளைகள் தாவி குதிப்பதை போலிருந்தது.

எங்கே அந்தரத்தில் பறந்து போய் கீழே விழுந்தால் அடிபட்டு விடுமோ? என்கிற அச்சத்தில் சிலர் தலைக் கவசம் அணிந்து இருந்தனர். சன்னி வந்தது போல எல்லோரும் குதித்தமைதான் மிச்சம். யாரும் மிதக்கவில்லை. சிரித்தபடி பார்த்துக் கொண்டிருந்தார் நித்யானந்தா. ரஞ்சிதாவை பார்த்து, ம்...நீயும் குதி...ம் என்பது போல சைகை காட்டினார்.

அடுத்த நிமிடம் பூச்சேலையை இடுப்பில் செருகிக் கொண்டு பூரிப்போடு உட்கார்ந்தபடியே சர் வாங்கமும் அதிர குதி குதியெனக் குதித்தார் ரஞ்சிதா.

இவற்றை எல்லாம் பார்த்துக் கொண்டிருந்த ஊடக வியலாளர் ஒருவருக்கும் மேலே மிதக்கின்ற ஆசை வந்தது. மிதக்க வைக்க சொல்லி நித்தியானந தாவிடம் கேட்டார். நித்தியானந்தா சளைக்க வில்லை.

ஊடகவியலாளரையும் குதிக்க சொன்னார். தலைக் கவசம் மாட்டிக்கொண்டு ஊடகவியலா ளரும் உட்கார்ந்தபடியே துள்ளிக் குதித்தார். ஆசிரமம் முழுக்க இப்படி ஒரே துள்ளலாக இருந்ததே தவிர யாரும் அந்தரத்தில் மிதக்கவில்லை. தீவிரமாக குதித்த ரஞ்சிதா மல்லாந்து விழுந்தார். ஆனாலும் சிரித்தபடி எழுந்து உட்கார்ந்தார்.

கடைசி வரை யாரும் மேலே மிதக்கவில்லை என்பதால் ஏமாற்றம்தான் மிஞ்சியது. வேடம் மீண்டும் கலைந்து விட்டதை மறைக்க அசட்டு சிரிப்புடன் விளக்கம் கூற முயன்றார் நித்தியானந்தா. ஆனால் சும்மா குதித்து ஆத்திரப்பட்ட ஊடகவியலாளரோ நித்தியானந் தாவுடன் வாக்குவாதம் செய்தார்.

மக்களை முட்டாளாக்கும் விதத்தில் இன்னும் எத்தனை காலம்தான் இப்படி வித்தை காட்டப் போகின்றார்? என்று கோபமாக கேட்டார். வெளிநாட்டு சீடர்கள் சிலரும் ஆத்திரத்துடன் கேள்வி எழுப்பினர். அவர்களை உள்நாட்டு சீடர்கள் சமாதானப்படுத்தி உட்கார வைத்தனர்.

## செல்வி.கோபிகா.தவராஜா அவர்களின் பரத நாட்டிய அரங்கேற்றம்





ஈழத்தமிழர் புலம்பெயர்ந்து தாம் வாழும் நாடெங்கிலும் அவர்கள் தம் மொழியையும் கலைகளையும் மற வாது பேணிக்காத்து வருகின்றனர்.

தாய்மொழியின் வளர்ச்சிக்கு இன்று பெரிதும் கைகொடுப்பது நம்கலைகளே! கடந்த ஆனி மாதம் 25ம் திகதி கனடா மொன்றியல் நகரில் கொன் கொடியா பல்கலைக்கழக ஒஸ்கார் பீற்றசன் அரங்கில் செல்வி. கோபிகா.தவராஜா அவர்களின் பரத நாட்டிய அரங்கேற்றம் இதனை நினைவுபடுத்தியது.

இவ்வரங்கேற்றத்திற்கு பிரதமவிருந் தினராக கனடா உதயன் பத்திரிகை பிரதம ஆசிரியர். "நட்பின்நாயகன்" ஆர்.என். லோகேந்திரலிங்கம் அவர்கள் கலந்து சிறப்பித்தார். கனடா பல்லின பத்திரிகையின் உப தலைவர் எழுத்தாளர் திரு.சுப்பிர மணியம். இராஜரத்தினம் அவர்கள் செல்வி கோபிகாவின் ஆற்றலை வியந்து பாராட்டினார்கள். செல்வி கல்வியிலும் கலையிலும் சிறந்து விளங்க யேர்மனியில் இருந்து திரு கணேசலிங்கம் குடும்பத்தினரும் வாழ்த்தி மகிழ்கின்றனர்.



## கனடிய தமிழ்பேசும் பாராளுமன்ற உறுப்பினர் ராதிகா சிற்சபைஈசனுக்கு 'வெற்றிமணி' பிரதி கையளிக்கப்பட்டது.

கனடிய பாராளுமன்றத்திற்கும் தெரிவுசெய்யப்பட்ட முதலாவது தமிழ்ப் பேசும் உறுப்பினர் ராதிகா சிற்சபைஈசனுக்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை 25ம் திகதி கனடா ஸ்காபுறோவில் நடைபெற்ற பாராட்டு வைபவம் ஒன்றில் "வெற்றிமணி" பிரதியொன்று கையளிக்கப் பட்டது. மேற்படி பிரதியில் ராதிகாவின் பாராளுமன்ற வெற்றி குறித்த செய்தி பிரசுரமானது குறிப்பிடத் தக்கது. ஸ்காபுறோவில் இயங்கிவரும் நிர்த்திய கலாஞ்சலி நுண்கலைக் கல்லூரியில் ராதிகா சிற்சபைஈசன் நடனம் பயின்று அரங்கேற்றவர். மேற்படி கல்லூரியின் அதிபர் "நாட்டிய ரத்னா" திருமதி நிரோதினி பரராஜசிங்கமும் அவரது மாணவிகளும் இணைந்து ராதிகா சிற்சபேசனைப் பாராட்டி ஒரு விருந்துபசாரத்தை நடத்தினர்.

அதிபர் பொ. கனகசபாபதி அவர்கள் தலைமையில் நடைபெற்ற மேற்படி பாராட்டு விழாவில் ராதிகாவின் பெற்றோரும் கலந்து சிறப்பித்தனர். இங்கே காணப்படும் படத்தில் திரு பரராஜசிங்கம் தனது துணைவியாருடன் சேர்ந்து "வெற்றிமணி" பிரதியொன்றை கையளிப் பதையும் அருகில் பாராளுமன்ற உறுப்பினர் ராதிகாவின் பெற்றோர் சிற்சபைஈசன் தம்பதி நிற்பதையும் காணலாம்.



# கனடாவில் 144 வது பிறந்த தினக் கொண்டாட்டம்!

-மாலினி-கனடா





எங்கள் வீட்டில் பிறந்த நாள் கேக் வெட்டி மகிழ்வோம்.இது யாவரும் அறிந்ததே! இங்கு ஒரு நாட்டின் பிறந்தநாள் கொண்டாட்டம் நடைபெறுவதை அறிவீர்களா? ஆம் கனடா நாட்டின் 144 வது பிறந்தநாளை அங்கு பிறந்த பிள்ளைகள் தனது பிறந்தநாளாக மகிழ்ந்து கொண்டாடுவது பெருமைக்குரியது அல்லவா!தனது பிறந்த நாளுக்கு அம்மா அப்பா தாத்த அம்மம்மா மாமா மாமி என சொந்த பந்தங்கள் வருவது போல் இங்கு நாட்டின் பிறந்தநாளுக்கு பாராளுமன்ற உறுப்பினரே வந்து கேக் ஊட்டுவது இன்னும் சிறப்பல்லவா! அதுவும் ஒரு தமிழ் பெண் (பா.உ) வந்து கலந்து கொள்வது தமிழுக்கும் பெருமை அல்லவா! ஆம்!கனடாவின் 144வது பிறந்த தினக் கொண்டாட்டத்தை (SOPCA-கனடா தினக் கொண்டாட்டம் - 2011) பீல் பிரதேசத்தில் வசிக்கும் கனடிய குடிமக்கள் மிசசாக்காவில் உள்ள ஸ்குயர்வண் பார்வையாளர் மண்டபத்தில் கடந்த மாதம் சிறப்பாகக் கொண்டாடினர்.

கனடிய தேசிய கீதம், தமிழ் வாழ்த்து ஆகியவற்றைத் தொடர்ந்து கனடிய தேசியக்கொடியை மூத்த உறுப்பினர்களில் ஒருவரான திரு. எம். சோமசுந்தரம் ஏற்றிவைத்தார். அடுத்து தாயகத்தில் மரணித்த உறவுகளுக்காக இரண்டு நிமிட மௌன அஞ்சலி சபையினரால் செலுத்தப்பட்டது. சொப்காவின் தலைவர் அந்தனி ஜேசுதாசன் 'எங்களை வரவேற்று பயமற்று வாழ மறுவாழ்வு தந்த கனடா நாட்டின் பிறந்த நாள் கொண்டாட்டத்தை இன்று நாங்கள மெய்யன்புடனும், நன்றியுணர்வுடனும் கொண்டாடுகின்றோம்' என்று தனது உரையில் குறிப்பிட்டார். தொடர்ந்து சொப்காவின் உப தலைவர் குரு அரவிந்தன் 'பல்கலாச்சார, ஒற்றுமையான வாழ்க்கைக்கு கனடா மிகவும் சிறந்த உதாரணமாக மற்ற நாடுகளுக்கு விளங்குகின்றது. இந்த நாட்டை எனது புகுந்த வீடு என்று சொல்லிக் கொள்வதில் நான் மிகவும் பெருமைப் படுகின்றேன்' என்று தனது உரையில் குறிப்பிட்டார்.

குரு அரவிந்தனின் உரையைத் தொடர்ந்து செல்வி தாரணி தயாபரன், செல்வி கிருத்திகா தயாபரன் ஆகியோரது வரவேற்பு நடனம் இடம் பெற்றது. வரவேற்பு நடனத்தைத் தொடர்ந்து நகராட்சி மன்ற 10ம் வட்டார உறுப்பினர் சூ மக்பெடரின் உரை இடம் பெற்றது. அடுத்து கனடா தினத்தைப் பற்றிய உரையை பிரெஞ்சு மொழியில் செல்வி அனிதா ரங்கநாதன் நிகழ்த்தினார். அடுத்து சொப்பகா சிறுவர்கள் கலந்து கொண்ட கலாச்சார நடனம் இடம் பெற்றது. ஸ்காபரோ ரூச்றிவர் பாராளுமன்ற கௌரவ உறுப்பினரும், கனடாவின் முதல் தமிழ் பாராளுமன்ற உறுப்பினருமான ராதிகா சிற்சபேசஈசன் அவர்கள் கனடா பிறந்த நாள் கேக் வெட்டி, பிறந்த நாள் பாடல் பாடி நிகழ்வைச் சிறப்பித்தார்.



## குரு அரவிந்தனுக்கு புனைகதை வித்தகன் விருது

அவரது சிறப்புரையைத் தொடர்ந்து, கலைமகள் குறுநாவல் போட்டியில் சர்வதேச விருது பெற்ற எழுத்தாளர் குரு அரவிந் தனுக்கு 'புனைகதை வித்தகன்' என்ற பட்டம் சூட்டி, விருது வழங்கி அவரது சாதனையையிட்டு தான் மட்டுமல்ல, தமிழ் இனமே பெருமைப் படுவதாகக் குறிப்பிட்டு அவரைப் பாராட்டினார்.

## இசையால் இறைவனடி பணிவோம்!

இன்று யேர்மனியில் சைவ ஆலயங்கள் பல மாநிலங்களிலும் அருள் சுரக்கின்றது.அந்த ஆலயங்கள் மீதான பக்திப் பாமாலைகளும்,சுரத்தட்டாக வெளிவருகின்றன. அண்மையில் டோமூண்ட் சிவன் கோவில் தேர்த்திருவிழா (10.07.2011)அன்று சிவன் பக்திபாமாலை என்ற ஓர் ஒலிப்பேழை வெளியீடு செய்யப்பட்டது. இந்த இசைப்பேழைக்கு இசையமைத்தவா் ஈழத்து இசைத்தென்றல் சிறுப்பிட்டி எஸ்.தேவராஜன். காந்தக்குரலோன் செ.கணேஸ் பாடியுள்ளாா்.மேலும் பல இளம் மொட்டுக்கள் பாடி பக்திபாமாலையை மணம்பரப்பச் செய்துள்ளனா். இப்பேழையை திருமதி பிரியதரிசினி கணேஸ் தயாரித்து வழங்கியுள்ளாா். பக்திமணம் பரப்பிய அனைவருக்கும் சிவத்தமிழ் வெற்றிமணி ஆகியவற்றின் இனிய வாழ்த்துக்கள். 2009 ஆண்டு இவா்கள் ஹம் காமாட்சி அம்மன் பக்திபாமலையை வெளியிட்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது.






# மனம் போல் வீடு

Dr.புஷ்பா கனகரட்ணம் (உளவியல் நிபுனர் -கனடா)

புலம் பெயர்ந்ததோடு நம்மில் பலர் வீடு, வாசல், காணி என்று எமது என்று நினைத்த பலவற்றையும் விட்டு அந்தநாள் ஞாபகங்களை மாத்திரமே சுமந்து கொண்டு இருக்கிறோம். இன்று அடுக்குக் கட்டிடங்களிலும் apartments இலும் எங்கள் வாழ்க்கை அடக்கப்பட்டு விட்டது. பாரதியார் பாடியது போல், "காணி நிலம் வேண்டும் அந்த காணி நிலத்தினிடையே ஓர் மாளிகை கட்டித்தரவேண்டும். அங்கு கேணி அருகினிலே தென்னைமரக்கீற்றும் இளநீரும் நல்ல முத்துச்சுடர் போலே நிலாவொளி முன்பு வரவேணும்", இப்பொழுது கனவு தான் காணமுடியும்.





இன்றைய புலம் பெயர்ந்த சூழலில் எம் வீட்டைச்சூழ கட்டமைக்கப்பட்டுள்ள சுற்றாடல் எமக்கு எந்த அளவுக்கு ஆரோக்கியத்தையும் அமைதியையும் பாதுகாப்பையும் தருகிறது? வீடு ஒரு அடிப்படைத் தேவை. அத்தோடு, அண்மையில் இருக்கும் மற்றைய வீடுகளுடன் சேர்த்து ஒரு சமூக, கூட்டு வாழ்க்கைக்கு அடிப்படையாக அமைகிறது. உளவியல் கண்ணோட்டத்தில் பார்த்தால் எம் வீட்டை மையப்படுத்தித்தான், நாம் திசை, வெளி (space) சார்ந்து யோசிக்கிறோம்.

வீடும் வீடு சார்ந்த சூழலும் எம் உடல் சார்ந்த ஆரோக்கியத்திற்கு முக்கியம் என்று எம்மில் பலருக்கு தெரிந்திருக்கலாம். உதாரணமாக அரசாங்க வீடுகளில் (government housing) வசிப்பவர்களில் 21.8% பேருக்கு Asthma வரக்கூடிய சந்தர்ப்பம் இருக்கிறது. இதுவே தனி வீடுகளில் 0.5% சாத்தியக்கூறு தான். கரப்பான் பூச்சிகள், எலிகள், மற்றும் ஒழுக்கு government housing இல் பிரச்சனையாக இருக்கும். இதேபோல் உடல் பருமனிற்கும் (Obesity) வீடு சார்ந்த சுற்றாடலுக்கும் தொடர்பிருக்கலாம். வீட்டின் அருகாமையில் super markets (பலசரக்குக் கடைகள்) இருப்பது, convenience stores (மூலைக்கடைகள்) இருப்பதைவிட ஆரோக்கியமான உணவுப் பழக்கங்களுக்கு ஏதுவாகிறது. அதுபோல் வீட்டைச் சூழ நடக்கும் வசதிகள் இருப்பதும் உதவுகிறது. வீட்டின் உட்புற, வெளிப்புற கட்டமைப்புகளில் உடைபாடுகள், சேதங்கள் இருப்பதுகூட உடற்பருமன் சார்ந்த பிரச்சனையை கொண்டுவரும். ஏனெனில் வீட்டினுள்ளே சேதம் இருக்கையில் ஒழுங்கான முறையில் உணவை சமைக்கவோ எடுத்து வைக்கவோ தடைகள் இருக்கும். நடை பழகும் வயதில் உள்ள குழந்தைகளின் நடமாட்டத்தையும் இது குறைக்கும். சுற்றுப்புற கட்டிடங்களில் சேதாரம் இருக்கும் போது ஒரு பாதுகாப்பின்மையை அது ஏற்படுத்தும். வெளி நடமாட்டத்தை கட்டுப்படுத்தும். உணவுக் கொள்வனவையும் பாதிக்கும். உளவியல் ரீதியாக வெளி உலகப் பிணைப்பு குறையும் போது மனஅழுத்தமும் ஏற்படலாம். ஆரோக்கியமற்ற உணவுப் பழக்கங்கள் மற்றும் உடற்பயிற்சி சந்தர்ப்பங்கள் குறையும் போது உடற்பருமன் விளைவாகலாம்.

வாழும் சூழலுக்கும் உளநலத்திற்கும் என்ன தொடர்பு? நாம் வாழும் கட்டிட அமைப்புகளை பார்த்தோமானால் உயர்மாடிக் கட்டிடங்கள் (high-rise housing) பெண்கள் மற்றும் குழந்தைகளின் உளநலத்தில் ஒரு எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துவதாக ஆய்வுகள் கருதுகின்றன. வீட்டினுள் போதிய பகல் வெளிச்சமின்மை மன அழுத்தத்துடன் தொடர்பு படுத்தப்படுகிறது. வெளிச்சப்தங்கள் (போக்கு வரத்து, விமானநிலையங்கள்), மற்றும் வீட்டினுள் அதிகம் பேர் வசிப்பது போன்ற காரணிகள் சற்றே மன சஞ்சலத்தை ஏற்படுத்தலாம். ஆனால் உளநோய்களோடு தொடர்பு படுத்தப்படவில்லை. காற்றை மாசுபடுத்தும், நச்சுபடுத்தும் சில காரணிகள், எம் நடைமுறைக் குழப்பங்கள், கோபம் போன்றவற்றுக்கு தூண்டுகோலாக இருக்கலாம். உளநோய் வைத்தியசாலை களில்கூட நோயாளிகள் நலம் அங்குள்ள தளபாட அமைப்புகள் மற்றும் (Privacy) வசதி சார்ந்து மாறுபடலாம். வேறு சில ஆய்வுகள் எப்படி வீடுகளில் வெளிப்புறத்தில் இருக்கும் அமர்வ தற்கான கட்டிட அமைப்புகள் (Porches) மற்றும் யன்னல்கள், முதியோர்களின் சமூக ஆதரவு பெறும் உணர்வை அதிகரிக்கின்றது என்பதை காட்டுகின்றன. வீட்டின் உட்புறத்தில் இருந்து பார்க்கக்கூடிய யன்னல்கள் இத்தகைய ஒரு தொடர்பை காட்டவில்லை. வாழும் இடத்தோடு சூழலோடும் ஒரு இணைப்பு இருக்கும் உணர்வு (sense of community) உங்கள் வீட்டைச் சூழ நடக்கும் வசதிகள் இருக்கும் போது




அதிகரிக்கிறது. நடப்பது எனும்போது தேவை நோக்கி நடப்பது அல்ல. அதவாது பேருந்து நிலையம் அருகில் இருந்தால் வேலைக்கு செல்ல பலரும் நடப்பார்கள். ஆனால் பொழுது போக்காக நடக்கும் சந்தர்ப்பம் இருக்கும் சுற்றாடல் களிலேயே சமூக இணைப்பையும், தொடர் பாடலையும் கூடுதலாக பார்க்கக்கூடியதாக இருக்கிறது. வீட்டைச் சுற்றிய நிலப்பரப்பு பல்வேறு காரணங்களுக்காக பாவனைக்கு விடப்படும்போது நடப்பதற்கான சந்தர்ப்பங்களும் அதிகரிக்கிறது. பழமையான சுற்றாடல்களில் வீதிகளுக்கான தொடர்பு அதிகமாக இருக்கிறது. சில இடங்கள் நெருக்கமாகவும் சில இடங்கள் பரவலாகவும் இருக்கும். இதனால் நடப்பதற்கான வசதிகள் அதிகரிக்கவும், மக்களிடையே தொடர்பாடல் அதிகமாக இருக்கவும் ஏதுவாகின்றது.




ஒரு மூலைக்கடை ஒன்று இருக்கும் போது அது அங்கு வாழும் மக்களை இணைக்கும் இடமாக, தொடர்புகளை ஏற்படுத்தி சமூகப்பிணைப்பை அதிகரிக்கும் இடமாக அமையலாம். அதுவே வணிகத்தலங்கள் என்று அதிகரிக்கும் போது வேற்று மனிதர்கள் (அந்த இடத்தை சாராத மனிதர்கள்) நடமாட்டம் அதிகரிக்கும். "எங்கள் இடம்" என்ற உணர்வையும், சமூகப்பிணைப்பை யும் அது பாதிக்கக்கூடும். அத்தோடு, வணிகத் தலங்கள் அதிகரிக்க, போக்குவரத்தும் அதி கரிக்கும். அதிக நடமாட்டம் கூடிய சாலைகளில் வாழ்பவர்கள் பொதுவாகவே தம் அயலவர்களை தெரியாதவர்களாக இருக்கிறார்கள். போக்கு வரத்தும், அதிக நடமாட்டமும், வேற்று மனிதர் களும், எங்களை அயலவர்களிடம் இருந்தும், வெளியில் நாம் செலவழிக்கும் நேரத்தை குறைப்பதினால் சமூக பிணைப்புகளில் இருந்தும், ஓரளவு துண்டிக்கத்தான் செய்கிறது என்பதை அனுமானிக்கலாம்.

தொடரும்..... "பாதுகாப்பான வாழ்க்கைச் சூழல்"

Krefeld நகரில் உங்கள் அபிமான ஸ்தாபனம்
K.S.SHARAN SHOP

துரித பணமாற்றுச் சேவை
இலங்கை இந்திய தாய்லாந்து மரக்கறி மளிகைப் பொருட்கள் மற்றும், கடல் உணவுப்பொருட்கள் அனைத்தும் தரமாகவும், மலிவாகவும் எம்மிடம் கிடைக்கும். எமது ஸ்தாபனம் சனி,ஞாயிறு தினங்களிலும் திறந்தே இருக்கும்.
(KIOSK என்பதனால்)
தொலைபேசி அட்டைகளும் தரமானவை எம்மிடம் கிடைக்கும்
K.Sathees
Dreikonigen Str.34
47799 Krefeld
மாதத்தில் முதல் வாரம் என்றும் மலிவு விற்பனை!
Tel:02151 36 98 646
0176 24 899 229

சரஸ்வதி கல்யாணமாலை

இதோ ஒரு திருமணசேவை! பெற்றோர்களே கவலையைவிடுங்கள்! உங்கள் பிள்ளைகளுக்கு மணமகனையோ மணமகளையோ தேடிகஸ்டப் படாதீர்கள். கலாச்சார மேம்பாட்டுடனும் சாதகக் குறிப்புகளுடனும் நீங்கள் விரும்பியபடி மணமக்களை சிறப்பாகத் தேர்ந்தெடுக்க எம்மை நாடுங்கள். பல ஆண்டுகள் சேவையாற்றி நம்பிக்கை பெற்ற ஸ்தாபனம்
தொடர்புகளுக்கு: செல்வி:
0173 27 50 457
02333 86 93 159
02333 86 93 165




# வாழ்க்கை என்பது கனவா! அல்லது நாடகமா!!

**கலைவளன் சிசு நாகேந்திரன் ( அவுஸ்திரேலியா )**

உலகமே ஒரு நாடகமேடை. அதில் நாமெல்லோரும் நடிகர்கள். பூமி என்னும் மேடையில் ஒவ்வொருவரும் வெவ்வேறு வேடம் தரித்துக்கொண்டு தங்கள் தங்கள் பாத்திரங்களைச் செவ்வனே நடித்துவிட்டுப் போகிறார்கள். இந்த நாடகத்துக்கு ஒத்திகையில்லை. நடிகர்களின் ஒப்பனையை இயற்கையே செய்து விடுகிறது. முன்னறிவிப்பின்றித் தோன்றி, தத்தம் பாத்திரங்களைத் திறம்பட நடித்துவிட்டு நடிகர்கள் மறைந்துவிடுகிறார்கள். உலக நாடகமேடையில் எல்லோருமே நடிகர்கள். பார்வையாளர்களும் அவர்களே! வேறாக பார்வையாளர்கள் என்றில்லை.

ஒரேயொரு வித்தியாசம். நடிகர் எப்போது தோன்றுவார், என்ன வேடத்தில் தோன்றுவார், எப்போது அவரின் நடிப்பு முடிவுக்கு வரும் என்பது எவருக்கும் தெரியாது எல்லாவற்றையும் இறைவன்தான் ஆட்டிப் படைக்கிறார். நாடகத்தின் மூலக்கதை, வசனம், பாத்திர அமைப்பு, தயாரிப்பு, நெறியாள்கை எல்லாமே ஆண்டவன்தான்! மிக நுணுக்கமாகத் திட்டமிட்டு செயலாற்றுகிறார். நாம் அவரின் நெறியாள்கையில் எள்ளளவும் பிசகாமல் நமக்கிட்ட பாகங்களை நடிக்க வைக்கிறார். மேடையில் தோற்ற வைத்து, அச்சொட்டாக நடிக்கவைத்து, எமது பாகம் முடிந்ததும் விலக்கிவிடுவார்.

வாழ்க்கை ஒரு சந்தைக்கூட்டம் என்று அறிஞர்கள் சொல்வார்கள். சந்தைக்குப் போகிறோம். தினமும் ஒழுங்காகச் சந்தைக்கு வருபவர்களையும் சந்திக் கிறோம். அவர்களுடன் உரையாடுகிறோம். புதுப்புது ஆட்களைக்கூட எதிர் கொள்கிறோம். அறிமுகம் செய்து அவர்களுடன் அளவாளாவிப் பழகுகிறோம். அந்த உரையாடல்களில் சந்தோஷமான விடயங்கள், துக்கமான விடயங்கள், பிடிக்காத விடயங்கள்கூட இடம்பெறும். சம்பாஷணை முரண்பட்டால் சண்டை சச்சரவுகள். கைகலப்புகள்கூட நடைபெறலாம். சாமான்களை வாங்கிக்கொண்டு அவரவர் வீடுகளுக்குத் திரும்புகிறோம் அவ்வளவுதான். காட்சி மாறிவிடும். சந்தையில் சந்தித்த வர்களையும் அங்கு இடம்பெற்ற உரையாடல்கள், உணர்ச்சிப் பேதங்கள் முதலியன பற்றி முற்றாக மறந்துவிடுகிறோம். வீட்டுக்கு வந்ததும் சந்தைக் கதையே வராது.

இவ்விதமாக, வாழ்க்கையில் எமது செயற்பாடுகள் எல்லாமே கனவுகள் தாம். குறுங்கனவுகள், நீண்ட கனவுகள் - எமது நாளாந்த செயற்பாடுகள், அதாவது உண்ணுதல், உறங்குதல், போதல் வருதல், இரங்குதல், கோபித்தல், துக்கித்தல், ஆடுதல், பாடுதல், இன்பம் நுகர்தல், துன்பம் அனுபவித்தல், இவையெல்லாம் குறுங்கனவுகள். இவைகள் உடனுக்குடன் மறந்துபோவன. நீண்ட கனவுகள் என்பன- பிறந்து, வளர்ந்து, படித்து, உழைத்து, திருமணஞ் செய்து. சொத்துச்சேர்த்து, ஆண்டு அனுபவித்து, பொருள்களை இழந்து, நோய்வாய்ப் பட்டு, கடைசியாக இறந்துபோதல் என்று கொள்ளலாம். நீண்ட கனவுகள்கூட காலப்போக்கில் நினைவிலிருந்து மங்கி, மறைந்து கடைசியாக மறந்தே போகும்.

நாம் ஒவ்வொருவரும் கனவுகள் கண்டு பழக்கம். சிலது நல்ல கனவுகள், சிலது கெட்ட கனவுகள். கனவு கண்டுகொண்டிருக்கும் நேரத்தில் மனதில் பெரிய தாக்கங்கள் ஏற்பட்டுவிடுகிறன. மனதில் பயம் வரும், அல்லது ஏக்கம் வரும். அல்லது சந்தோஷமிகுதியால் குதூகலிக்கும். வாழ்க்கையில் எதிர்பார்க்காதது எல்லாம் கனவில் நடந்தேறும். ஆனால் கனவுமுடிந்து கண் விழித்துக்கொண்டதும் எமக்கே சிரிப்பாக, அதிசயமாக, ஏமாற்றமாக இருக்கும். இப்படியெல்லாம் உணர்ச்சி வசப்பட்டோமே என்று எம்மையே நம்பமுடியாத நிலையில் இருப்போம். இந்தளவுக்கு நாம் மனதைப்போட்டு உலைச்சதெல்லாம் சும்மா கனவுதானா?

நிஜமாகவே நாம் அந்தத் துக்கத்தையோ, ஏக்கத்தையோ, சந்தோஷத்தையோ அனுபவிக்கவில்லையா என்று எம்மையே நாம் கேட்டுக்கொள்வோம். கனவு நேரத்தில் நம் உடம்பிலும் உள்ளத்திலும் ஏற்பட்ட தாக்கங்களெல்லாம் பொய். அவை தோற்றம் மட்டுமே. விழித்ததும் நம் மனதிலோ உடலிலோ எந்தவித மாற்றமும் ஏற்பட்டிருக்காது.

இதேமாதிரித்தான், இந்தக் கனவு மாதிரித்தான் எமது வாழ்க்கையும் என்பதை ஆறுதலாக உற்று யோசித்தால் புரியும். பிறக்கிறோம், அனுபவிக்கிறோம், இறக்கிறோம். இன்பம், துன்பம், கோபம், துக்கம் எல்லாம் வரும் போகும். ஆனால் அவையெல்லாம் உடலைப் பொறுத்தமட்டில்தான். உயிரானது தன்பாட்டில், அமைதி யாக, எல்லாவற்றுக்கும் சாட்சியாக, பார்த்துக்கொண்டிருக்கும். பின்னர், இந்த உடம்பின் காலம் முடிந்ததும் இதிலிருந்து நீங்கி இன்னொரு உடம்புக்கு மாறிவிடும்.

இந்தப் பிறப்பில் இந்த உடம்பு செய்த நல்வினை தீவினைகளைப் பொறுத்தே அடுத்த பிறப்பை இந்த உயிர் எடுத்துக்கொள்ளும். சகலதும் ஆண்டவனின் திட்டத்தின்படியே நடக்கும். நாம் செய்கிறோம் என்று நினைப்பதெல்லாம் வீண் பிரமை. நாமாக ஒன்றும் திட்டமிடுவதோ, செய்வதோ கிடையாது, எல்லாம் ஆண்டவன் விதித்தபடியே நடந்து தீரும்.

ஒன்றை நினைக்கின் அது ஒழிந்திட்டொன்றாகும்
அன்றி அதுவரினும் வந்தெய்தும் - ஒன்றை
நினையாதபோது முன்வந்து நிற்கும் எதுவும்
எனையாளும் ஈசன் செயல் --- (ஔவையார்.)

சற்று பொறுமையாக யோசித்துப் பார்த்தால் விளங்கும். வாழ்க்கையில் நடக்கும் ஒவ்வொரு சம்பவமும் கனவுதான். சில காலத்துக்கு முன்னர் நடந்த சில சம்பவங்கள் எங்கள் மனதை மிகவும் பாதித்தன. தாங்கமுடியாத உணர்ச்சி வசப் பட்டோம். ஆனால், காலப்போக்கில் அவையெல்லாம் நினைவாய், கனவாய், பழங்கதையாய் மனதை விட்டு அகன்றுவிட்டனவல்லவா? பழையதுகளை இப்போது நினைத்துப் பார்க்கும்போது அவை கனவுமாதிரி மனதுக்குத் தோற்றவில்லையா?



### யேர்மன் தழுவிய ரீதியில் யேர்மனிய பிரதமரால் நடாத்தப்படும் ஆய்வுக் கட்டுரைப் போட்டியில், நோற்றைன் வெஸ்பாலின் மாநிலத்தில்

# தமிழ் மாணவிக்கு முதலிடம்!



ஷறீகா சிவநாதன்

யேர்மனிய பிரதமரின் யேர்மன் தழுவிய வரலாற்று ஆய்வுக் கட்டுரைப் போட்டி 2010- 2011 (Landessieg beim Geschichts wettbewerb des Bundes präsidenten) நான்கு வருடங்களுக்கு ஒரு முறை நடைபெறும் இவ்வாய்வுக் கட்டுரைப் போட்டி யேர்மன் தழுவியரீதியில் யேர்மனிய பிரதமரால் நடாத்தப் படுகிறது.

இதில் 12ம் வகுப்புக்கான ஆய்வுக்கட்டுரைப் போட்டியில் ஷறீகா சிவநாதன் நோற்றைன் வெஸ்பாலின் மா நிலத்தில் பங்கு கொண்டு 1ம் இடத்தைப் பெற்றுள்ளார். இவர் எழுதிய கட்டுரை தொப்பியின் கீழே ஒரு நகரம் எறியப்படுவதற்காகவா? ( Unterm Deckmäntelchen- Ein Entwurf der stadt zum verwerfen? எனும் தலைப்பிலே பாடசாலை வரலாற்றில் நடைபெற்ற ஒரு சர்ச்சைக்குரிய விடயத்தை ஆய்வு செய்து எழுதியுள்ளார். இப்போட்டியில் 1152 பேர்






யேர்மனியின் நோற்ரைன் வெஸ்பாலின் மாநிலத்தில் பங்கு கொண்டனர். 78 மாணவர்களின் கட்டுரை சிறந்த கட்டுரைகளாக தெரிவுக்குள்ளாகின. அதில் ஷறீகா சிவநாதன் எழுதிய கட்டுரை சிறந்த கட்டுரைகளில் முதலாவதான தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவருக்கான மாநிலப்பரிசை நோற்றையின் வெஸ்பாலின் இளையோர் கலை கலாச்சார விளையாட்டிற்குப் பொறுப்பான மாநில முதல்வர் ute schäfer பொன்னில் வழங்கிக் கௌரவிக்கின்றார். இந்த நிகழ்வில் பேராசிரியர் ( prof. Dr Hans Walter Hutter, fernshehmoderator Ralph Caspers ) கலந்து கொண்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. இவருடைய இந்த ஆய்வுக் கட்டுரை ( Geschichte haus Bonn இல் ஆவணப்பதிவுப்பகுதியில் வைக்கப்படவுள்ளது. அடுத்த சுற்று யேர்மன் தழுவிய ரீதிக்காக பேளின் நகருக்குச் சென்றுள்ளது. யேர்மன் தழுவிய பரிசினையும் பெற்று தமிழர்க்கு மேலும் பெருமை தர வாழ்த்துவோம்.

## கொட்டும் மழையில் அருள் சொட்டும் குறிஞ்சிக் குமரனின் தேர்ப்பவனி!








கடந்த மாதம் 17ம் திகதி யேர்மனியில் கோமஸ்பார்க் நகரில் எழுந்தருளியுள்ள குறிஞ்சிக்குமரன் ஆலய தேர் திருவிழா இடம் பெற்றது. முருகன் குன்றில் வீற்று இருப்பதனால் அந்த உயர் மலைச்சாரலில் என்றும் மழைச்சாரலுக்கு பஞ்சமில்லை.தேர் வலம் வர ஆயத்தமாக, மழை கொட்ட ஆரம்பித்தது. சோதனைக்குள்ளாகும் பக்தி புடம் போடப்பட்ட தூய பக்தியாக மிளிரும் அல்லவா? அப்படியே அந்த மழையில் நனைந்தபடி பக்தர்கள் குறிப்பாக, பெண்கள் அப்படியே தீச்சட்டியினை தலையில் சுமந்த வண்ணம் முருகனுடன் வலம் வந்தனர். உண்மையில் பெண்கள் பெருமைப்படவேண்டும். ஏன் என்றால் எந்த இடத்திலும் நம் பண்பாட்டு கலாச்சாரங்களை மதித்து நிற்பதில் அவர்கள் முன்னிலையில்தான் இன்றும் உள்ளனர். தேர் வடத்தைப் பிடித்து இழுப்பவர் கூட்டத்தில் ஒரு ஜீன்சைக்காண முடியாது. இந்த நாட்டில் எவ்வளவோ அசௌகரியங்கள் இருந்தாலும், சேலையுடன் தான் கோவிலுக்கு வருகிறார்கள். இதனைக் கண்டு யாழ்ப்பாணத்தில் இருந்து விடுமுறையை தன் பேரப்பிள்ளைகளுடன் கழிக்க வந்த ஒரு பெரியவர் மகிழ்ச்சி ததும்பக் கூறினார்.மேலே கொட்டும் மழையில் அருள் சொட்டும் குறிஞ்சிக் குமரனின் தேர்ப்பவனி!









INDO AFRO TRAVELS

Mit uns um die Welt

மிகவும் மலிவாகவும் உங்கள் தேவையை ஒரே இடத்தில் பூர்திசெய்து கொள்ளவும் நாடுங்கள்...

தொடர்புகளுக்கு: ஶ்ரீதர்

Tel:0621 86 24 32 12

Handy:0173 68 28 990

e.mail info@indo-afro.de Fax:0621 86 24 32 14

யேர்மனியில் Manheim நகரில்

S.J. Enterprises
Indo-Afro Travels
S.1-11
68161 Mannheim

# குழந்தை கறுப்பா? சிவப்பா? குங்குமப்பூ... தீர்மானிக்குமா?

**கனக்ஸ்** கனடா



புலம் பெயர்ந்த கர்பவதிப் பெண்கள் என்ன செய்கிறார்களோ தெரியாது, ஆனால் ஊரில் இருக்கும் போது மகள் கர்ப்வதியானால் தாய் குங்குமப்பூ கொடுத்தே தான் தீருவர். அப்போது தான் பிறக்கிற பிள்ளை நல்ல சிகப்பு நிறமுடையதாய்ப் பிறக்கும் என்ற நம்பிக்கை. இதில் ஏதாவது உண்மை இருக்குமோ தெரியாது.

பாட்டி கூறிய தத்துவம் இப்போ 75 ஆண்டு களின் பின்னர் விஞ்ஞானிகளின் அங்கீகாரம் பெற்றிருப் பதைக் காண முடிகிறது. பாட்டியின் அனுபவ விஞ்ஞானம் இன்றைய அறிவியல் விஞ்ஞானமா கிறதைக் காண மகிழ்ச்சியாக உள்ளது.

அண்மையில் வெளியான இரண்டு ஆய் வறிக்கைளின் படிக்கு தாயினது கருப்பையில் சிசு விருத்தியுறுகின்ற சமயத்திலே பெற்றோர் களின் உணவு முறைகள் சிசுவின் விருத்தி யினைப் பாதிப்பதால் அதன் ஆயுட் காலம் முழுவதுமே குறிப்பிட சில நோய்கள் ஏற்படக் கூடிய வாய்ப்புக்கள் உள்ளன என்கிறார்கள் ஆய்வாளர்கள்.

கொஞ்சம் விளக்கம் தேவைப்படுகிறது அல்லவா? இதோ! நாம் ஒவ்வொருவரும் இந்த உலகிலே அவதரிப்பதற்கு நமது தாய் தந்தையர்தான் காரணம் என்பதை எத்தனை முறைதான் சொல்வதாம் ஆகவே அதை விடுங்கள். ஆனால் எம்மில் பிறக்கும் பொழுதோ பின்னர் வளரும் பொழுதோ காணப்படுகின்ற இயல்புகளுக்கும் அந்த இருவரிடமும் நாம் உபகாரமாகப் பெற்ற பரம்பரை அலகுகளே காரணம் எனலாம். இதனையே Eugenics ( பரம்பரைவளர்ப்பியல்) என்கிறார்கள்.ஆனால் நாம் வளர்கின்ற பொழுது எமது சமூகச் சூழல் எமது இயல்புகளில் சில மாற்றங்களை ஏற்படுத்தவே செய்கின்றது. அது நண்பர்கள் மூலமாக ஏற்படலாம், பெற்றோர்கள் சுற்றத்தின் மூலம் ஏற்படலாம் வேறுபல சமூகச் சூழல் காரணிகளாலும் ஏற்படலாம். இதனை Euthenics (சூழல் வளரப்பியல்)என்பார்கள் ஆகவே நமது ஆளுமையைத் தீர்மானிப்பது Eugenics மற்றும் Euthenics ஆகிய இரண்டினதும் கூட்டே. ஆனால் இது காலம் வரை அத்தனை கவனத்தில் இல்லாமல் இருந்து வந்துள்ளது இன்னொரு கூறு. அதனை Epigenetics ( மேல்சூழல் வளரப்பியல்) என்பார்கள். கருப்பை யிலே சிசு விருத்தியுறுகின்ற போது அதற்குக் கிடைக்கின்ற சூழல் அதன் பரம்பரை அமைபினில் மாற்றங்களைக் கொண்டு வரலாம் என்பதை இதனால் அறிய முடிகிறது. ஆகவே கரப்பவதிப் பெண் ஒருவர் குங்குமப்பூ உட்கொள்வதால் குழந்தையின் தோல் நிறத்தில் மாற்றம் ஏற்பட வாயப்பு உண்டு.

மனிதருடைய தோலின் நிறத்தினைப் பார்ப்போமாயின் வெறுமனே ஒரு முனையில் கறுப்பும் மறு முனையில் வெள்ளையையும் வைத்தால், இவை இரண்டுக்குமிடையே எத்தனை எத்தனை நிறங்



களைக் காண்கிறோம். தந்தையின் விந்து கொண்டுவரும் நிறத்திற்கான பரம்பரை அலகும் தாயினது சூல் வைத்திருக்கும் நிற்திற்கான பரம்பரை அலகும் பிள்ளை கறுப்பா, வெள்ளையா என்பதை தீர்மானிக்கின்றன. அப்படியாயின் இந்தனை நிறபேதங்கள் எப்படித் தோன்றுகின்றன. தாய் தந்தையிடமிருந்து வருகின்ற நிறத்தினைத் தீர்மானிக்கும் பரம்பரை அலகுகளை பிரதான பரம்பரை அலகுகள் ( Major Genes) என்கிறோம் ஆனால் முட்டையினது குழியவுருவிவே நிறத்துடன் சம்பந்தப்பட்ட பல் குழியவுரு பரம்பரை அலகுகள் ( Polygenes) உள்ளன. இவையே கறுப்புக்கும் வெள்ளைக்கு மிடையான நிற பேதங்களுக்குக் காரணமாகின்றன. ஆகவே உட்கொள்ளுகின்ற குங்குமப்பூ குழியவுருப் பரம்பரை அலகுகளில் மாற்றங்களை செய்யலாம். ஆய்வாளர்கள் தான் அதனைக் கண்டு பிடிப்பார்கள்.

## காதோடு காதாக



**தத்துவங்கள் ஞானியாக்கவல்ல**
**உன்னை வாழ வைக்கவே!**

பணம் இல்லாத போது ரோட்டில் சைக்கிள் ஓடுகின்றோம்.
பணம் உள்ள போது வீட்டில் சைக்கிள் ஓடுகின்றோம்.

பணம் இல்லாத போது திருமணம் செய்கின்றோம்
பணம் உள்ளபோது விவாகரத்துச் செய்கின்றோம்.

பணம் இல்லாத போது செல்வந்தனாக நடித்தோம்
பணம் உள்ள போது வறியவனாக நடிக்கின்றோம்

**கலைக்கதிர். கதிர்.துரைசிங்கம்.**



### கோபம்!

புத்தபெருமானை எல்லோரும் மதிப்பதைக் கண்ட ஒரு இளைஞன் அவரிடம் சென்று மற்றவர்களுக்கு புத்தியும் போதனையும் கூற உனக்கு என்ன அருகதை இருக்கு,

நீயும் என்னைப் போல் ஒருவன்தானே! நீ ஒரு போலி, என குறை கூறித் தூற்றினான்.
தூற்றலுக்கு பதட்டப்படாத புத்தபிரான்! பரிசுப் பொருள் ஒன்றை வாங்கி ஒருவருக்கு கொடுப்பதற்காக நீ செல்கின்றாய்.

அந்தப் பொருளை அவர் ஏற்காவிட்டால் அப் பரிசுப்பொருள் யாருக்கு சொந்தமாகிறது என்று கேட்டார். இது என்ன கேள்வி? நான் வாங்கிய பொருள் அவரிடம் சேராவிட்டால் அது எனக்குத்தானே சொந்தம் என்றான்.
புத்தர்: சிரித்துக்கொண்டு சரியாகச் சொன்னாய். உன் தாழ்வு உணர்வால் எற்பட்ட கோவத்தால் நான் இழிவுபடவும் இல்லை, பதட்டப்படவும் இல்லை! உன் கோபத்தை நான் உள்வாங்கவும் இல்லை. ஆதலால் அது உனக்கே சொந்தமாகின்றது!. உன்னை நீயே காயப்படுத்திக் கொண்டாய் என்றார்.


**Süd Stadt Shop**
**(Asien Markt)**
மரக்கறி, மீன், மளிகைப் பொருட்கள்
மற்றும் Telephone card,
Lebaramobile

**Tel&Fax: 02324 3440296**



**Süd Stadt Shop**
**(Asien Markt)**
**Uhland str.20**
**45525 Hattingen**

உரிமையாளர். K.சுந்தரலிங்கம்

**Jasmine Silk House**
யேர்மனி - கேவலார் மரியன்னையின்
திருவிழாவில் (13.08.2011)
எமது ஸ்தாபனத்தாரின்
**மாபெரும் மலிவு விற்பனை!**
நங்கையர் விரும்பும் அழகிய காப்புக்கள்
கொள்ளை மலிவும் கொள்ளை அழகும்!!
**Tel:02102 844744**
T.Mohanadas


அமரர் திவேதன் அருந்தவராஜா
நினைவாக...



வாழ்வின் ஒவ்வொரு
நொடியும் பொன்னானது!
அன்பு நெறியில் தினம் தினம்
மலர்!
Krefeld Germany
02151-39 73 83

# டோட்மூண்ட் சாந்தநாயகி சமேத சந்திர மௌலீஸ்வரர் ஆலய (சிவன் கோவில்) தேர்த்திருவிழா











கடந்த 12.07.2011 ஞாயிற்றுக்கிழமை டோட்மூண்ட் சாந்தநாயகி சமேத சந்திர மௌலீஸ்வரர் ஆலய (சிவன் கோவில்) தேர்த்திருவிழா மிகச்சிறப்பாக இடம் பெற்றது. முதன் முதலாக டோட்மூண்ட் நகரில் தேர் ஊர்வலம் வந்த காட்சி மனதைக் கொள்ளை கொண்டது. தேருக்குபின்னே பக்தியுடன் பஜனை செய்து வர ஆண்கள் பெண்கள் இருபுறமும் வடம்பிடித்து இழுத்து வர எளிமையான தேர் எழிலாகப் பவனிவந்தது. எதிர்காலத்தில் மிகப் பிரமாண்டமான மக்கள் சமுத்திரத்தில் தேர்பவனிவரும் என்பதற்கு இந்த முதற் பவனி கட்டியம் கூறுவதுபோல் இருந்தது. டோட்மூண்ட் நகரம் யேர்மனியில் தமிழர்கள் புடைசூழ உள்ள நகரங்களுக்கு மத்தியாகத் திகழ்வது இங்கு குறிப்பிடத்தக்கது. **படங்கள்: வெற்றிமணி**


**Gnanam's Travels**

சகலநாடுகளுக்கும் சென்றுவர யேர்மனியில் இருந்து குறைந்த கட்டணத்தில் இலகுவாக விமானச் சீட்டுக்களைப் பெற்றக்கொள்ள நாடவேண்டிய இடம்

Tel: 0214 870 924 39 , 0214 3127407 Fax:0214 8924 952

**Gnanam Asia**

**Mini Market and Silk House**

இல்லத் தேவைகளை நிறைவு செய்ய நாடுங்கள். உடன்
மரக்கறி வகைகள் கடலுணவுப் பொருட்கள்
மளிகைப் பொருட்கள் மற்றும் தொலைபேசி அட்டைகள்
நீங்கள் விரும்பும் அழகிய ஆடைகள் இவற்றுடன் அனைத்து
தையல் வேலைகளும் செய்து தரப்படும்




Von-ketter Str.32
51371 Leverkusen
Tel: 0214 312 3565, Fax. 0214 892 4952
Mobil:0177-5054286,



**Fahrschule Dortmund**

**HK Hammacher**



ஆங்கிலம், யேர்மன், பிரஞ், துருக்கி மொழிகளில் வகுப்புக்கள் உண்டு. பரீட்சைக்கு வரக்கூடிய வினாக்கள் சிறப்பாக தெரிவுசெய்து கற்பிக்கப்படும்.

தமிழில் தொடர்புகளுக்கு: 0172 57 35 454

HK Hammacher
Schleswiger Str .5
44145 Dortmund
Germany
0231 81 55 94
0173 56 46 651

MPU
ASF
ASP


இவர்களுக்கான சிறப்பு வகுப்புக்களும் உண்டு!

## ஒலிம்பிக் சாதனையாளன் சிவபூமி மாணவன் துஷ்யந்தனுக்கு
# யாழ். நகரில் செங்கம்பள வரவேற்பு!



கிறீஸின் தலைநகர் ஏதென்ஸில் நடைபெற்ற மாற்று வலுவுள்ளோருக்கான ஒலிம்பிக் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்ற கோண்டாவில் சிவபூமி பாடசாலை மாணவன் செல்வன் சிவராசா துஷ்யந்தனுக்கு நேற்று யாழ். நகரில் மகத்தான வரவேற்பளிக்கப்பட்டது. ஒலிம்பிக் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்று இலங்கைக்கும் தமிழினத்துக்கும் பெருமை சேர்த்த துஷ்யந்தனைப் பெரும் எண்ணிக்கையானோர் திரண்டு வரவேற்றனர். இவர் 4*100 மீற்றர் அஞ்சல் ஓட்டப் போட்டியில் இலங்கை அணி சார்பாகப் பங்குகொண்டு இரண்டாம் இடத்தைப் பெற்றிருந்தார்.

கொழும்பில் இருந்து யாழ்பாணம் திரும்பிய துஷ்யந்தன் அவா்களுக்கு நல்லூரில் இருந்து சிறப்பு ஊர்தியில் ”பாண்ட்““ வாத்திய அணி வகுப்புடன் வரவேற்கப்பட்டார். மக்கள் வீதியில் இருபுறமும் திரண்டு நின்று சாதனை வீரனை வரவேற்றனர். இந்த வரவேற்பு நிகழ்வில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், சிவபூமி ஸ்தாபகர் செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன், வடமாகாண விளையாட்டுத்துறைப் பணிப்பாளர் சி. அண்ணாத்துரை, யாழ். பல்கலைக்கழகப் பேராசிரியர்களான எஸ். சிவலிங்கராசா, அ. சண்முகதாஸ் ஆகியோர் உட்படப் பலர் கலந்து கொண்டனர். பின் கௌரவிப்பு நிகழ்வு சிவபூமி பாடசாலையில் இடம் பெற்றது. இங்கு மாணவனுக்கு செங்கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டது. (07.07.2011)








அதே கண்கள் படத்தில் ரவிச்சந்திரன்-காஞ்சனா

# தமிழ்த் திரையுலகின் பழம்பெரும் நடிகர் ரவிச்சந்திரன் காலமானார்!

சில ஆண்டுகளாக சிறுநீரக கோளாறால் பாதிக்கப்பட்ட அவரது உடல் நிலை மிகவும் மோசமானதால், திங்கட்கிழமை (25.07.2011) காலமானார். அவருக்கு வயது 71.

தமிழ்த் திரைப்படவுலகில் 1970களில் முன்னணி கதாயகர்களுள் ஒருவராகத் திகழ்ந்த ரவிச்சந்திரன், இயக்குனர் ஸ்ரீதரின் “காதலிக்க நேரமில்லை“யில் (1964) அறிமுகமானவர். “இதயக் கமலம்“,“கௌரி கல்யாணம்“, “குமரி பெண்“ அதே கண்கள், நான் கே.பாலச்சந்தரின் நான்குசுவர்கள் உள்ளிட்ட படங்களில் நடித்தவர். அன்று எம்.ஜி.ஆர் சிவாஜி போன்று திகழ்ந்தவர்கள் மறைந்த ஜெயசங்கரும் இவரும். காதலிக்க நேரமில்லை படத்தில் இவர் வந்தபோது தான் முதல் ஸ்டைல் என்பது தமிழ்சினிமாவில் சிறப்பாகப் புகுந்தது.(1964) நடிகர்திலகம் இதில் விதிவிலக்கு. ரஜினிகாந்துடன் “அருணாசலம்“, கமல்ஹாசனுடன் “பம்மல் கே சம்பந்தம்“ ஆகிய படங்களில் நடித்தார்.மறைந்த நடிகர் ரவிச்சந்திரனுக்கு விமலா என்ற மனைவியும், பாலாஜி, அம்சவரதன் என்ற 2 மகன்களும், லாவண்யா என்ற மகளும் உள்ளனர்.

**திருமதி .மோகனதாசன்**

**பவளராணி அவர்களின் மறைவுக்கு**

**Gopara Gnanam**

**ஸ்தாபனத்தாரின்**

**இதய அஞ்சலி**



முல்லைத்தீவு தண்ணீரூற்றை பிறப்பிடமாகவும் ஜேர்மனி Mühlheim இல் வசித்து பின்னர் Lünen ஐ வதிவிடமாகவும் கொண்ட **மோகனதாசன் பவளராணி** அவர்கள் 21-07-2011 வியாழக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்ற நல்லையா, சரஸ்வதி ஆகியோரின் பாசமிகு மகளும், காலஞ்சென்ற நாகராசா, கமலாம்பிகை அவர்களின் பாசமிகு மருமகளும், மோகனதாசன் (முல்லை மோகன்) அவர்களின் அன்பு மனைவியும், ரஜிந்தர், சுரேந்தர், நிறோபா ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆவார்.

எமது ஸ்தாபனத்தில்
இன்முகம் தவழ
இணையிலா அன்புடன்
வாடிக்கையாளர்களின் மனமறிந்து
மகிழ்வுடன் சேவை செய்த - எங்கள்
பவள - ராணி அக்கா
உங்கள் பிரிவில்
குடும்பத்தில் ஒருவராய்
நின்று வாடுகின்றோம்!

உங்கள் அத்ம சாந்திக்கா பிரார்த்திக்கின்றோம்.

Gopara Gnanam
Dortmund-Germany
Tel: 0231/5450028
Mob: 01713306542

## சொன்னதை மட்டும் சொல்கின்றோம்!

no comments

### கண்ணீர் விட்டு அழுதார்!முன்னாள் அதிபர் சந்திரிகா குமாரதுங்க.

கடந்த மாதம் கொழும்பில் நடைபெற்ற மறைந்த முன்னாள் நீதிபதி ஆனந்த பாலகிருஷ்ணரின் நினைவு விழாவில் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றார் இலங்கை முன்னாள் அதிபர் சந்திரிகா குமாரதுங்க.

தனது பேச்சின் இறுதிப் பகுதியில், சமீபத்தில் உலகை அதிர வைத்த தமிழினப் படுகொலை குறித்த இலங்கையின் கொலைக்களம் என்ற வீடியோ தொடர்பாக கருத்து தெரிவித்தார்.

இந்த விடியோவை பிரிட்டன் தொலைக்காட்சியில் பார்த்த 28 வயதான தனது மகன் தான், சிங்களவன் என்று கூற வெட்கப்படுவதாக அழுதவாறு கூறியதாக சந்திரிகா குறிப்பிட்டார். மேலும் தனது மகளும் இவ்வாறே தெரிவித்தார் என்றார் அவர். இதைக் கூறும்போது கண் கலங்கிய சந்திரிகா சற்றுநேரம் அமைதியாகிவிட்டு மீண்டும் தழுதழுத்த குரலில் உரையைத் தொடர்ந்தார். இந்த நிகழ்ச்சியில் தூதர்கள், ஊடகவியலாளர்கள், சமூக அமைப்பின் பிரதிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்(.23.07.2011)

### சிலர் சுயநலத்துக்காக, வெளிநாடுகளில் அகதிகளாய் உள்ளனர்!

லண்டன்: தங்களது சுயநலத்துக்காக, இங்கிலாந்து, ஆஸ்திரேலியாவில் போய் தஞ்சமடைந்துள்ள சிலர், தங்களது சொந்த நாடான இலங்கைக்கு எதிராக நடந்து வருகின்றனர். இவர்களது வலியுறுத்தலுக்குப் பயந்து ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணி, இலங்கை கிரிக்கெட் தொடரில் பங்கேற்காமல் புறக்கணித்தால் கடும் விளைவுகளை கிரிக்கெட் சந்திக்க நேரிடும் என்று முன்னாள் இலங்கை சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் கூறியுள்ளார்.

முன்பு தென் ஆப்பிரிக்காவின் இனவெறியைக் கண்டித்து சர்வதேச அளவில் அந்த நாட்டுடன் யாரும் கிரிக்கெட் உறவுகளை வைத்துக் கொள்ளக் கூடாது என்று சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் தடை விதித்தது. இதனால் கிட்டத்தட்ட 25 ஆண்டுகளுக்கும் மேலாக சர்வதேச கிரிக்கெட்டில் பங்கேற்க முடியாமல் போனது தென் ஆப்பிரிக்கா.அதேபோல ஜிம்பாப்வே கிரிக்கெட் அணியையும், அதன் இனவெறிக்காக இங்கிலாந்து, ஆஸ்திரேலியா போன்ற நாடுகள் புறக்கணித்து வருகின்றன.(15.07.2011)

**T.T.S Brothers**

Asien Supermarkt

**உங்கள் உறவுகளுக்கு**
**துரிதமாகப் பணம் அனுப்ப நாடுங்கள்!**
0.01€ இருந்து 500€ வரை அனுப்ப 8.90 € மட்டுமே!
500€ இருந்து 1.500€ வரை அனுப்ப 15.00€ மட்டுமே!

MoneyGram Transfert d'argent

இலங்கை, இந்திய மளிகைப்பொருட்கள், மற்றும் கடல் உணவு வகைகள் அனைத்திற்கும் நாடுங்கள்.

**மங்கையர் விரும்பும் அசல் 22 கரட் தங்கநகைகள் நவீன டிசைன்களில் அழகுறத் தருபவர்கள்**

TEL: 0231-819288 Fax: 0231-833431
RHEINISCHE STR 52
44137 DORTMUND

Helmholtz Str.11
46045 Oberhausen
Tel:0208 202829

Garten Str.29
48147 Münster
Tel: 0251 2301184

**திருக்கணித ஜோதிடம்**

ஜாதகக் குறிப்பு எழுதுதல்
விவாகப் பொருத்த நிச்சயம்
சுபமுகூர்த்தம் வைத்தல்
ஜோதிட ஆலோசனைகள்
திருமணம்
பூப்புனித நீராட்டு விழா
புண்ணியாகவாசனம்
சிரார்த்தம்
கடைத்திறப்பு விழா
கோயிற்கிரியைகள்
கிரகசாந்தி





சிவஸ்ரீ க.சபாநாதகுருக்கள்
Kreuzeskirchstr. 40
45127 Essen
Tel: 0201-652450

# திரை உலகம்

## இன்று அதிகம் பேசப்படுகின்ற
## அமைதியான நாயகன் சூர்யா பற்றி....




தங்கை பிருந்தாவுடன்







மது,மாது,சிகரெட்,டிஸ்கோ,அரட்டை எந்தப் பழக்கமும் இல்லாதவர் சூர்யா. படப்பிடிப்பு முடிந்தால் அப்பா, அம்மா, மனைவி என ஒன்று கூடுவதையே விரும்புவார். கேட்டால், “அப்பாவும் இப்படித்தானே இருந்தார்!“ என்பார்.முருக பக்தர் சூர்யா. எழுந்தவுடன் குளித்துவிடுவார்.


தேவர்மகன்

நெற்றியில் கொஞ்ச நேரமேனும் திருநீறு துலங்கும். தொழில் மீது இருக்கும் அளவுக்கு கடவுளிடமும் பக்தி உண்டு!
துணி ஏற்றுமதி நிறுவனத்தில் வேலை பார்த்த காரணத்தால், படப்பிடிப்பில் அவருக்கான ஆடைகளை அவரே வெட்டி வடிவம் செய்கிறார்! அவரது புதுப் படம் வெளியாகும்போதெல்லாம், அவர் படித்த லயோலா கல்லூரியின் பேராசிரியர்களுக்கு மின் அஞ்சல் செய்து அபிப்பிராயம் கேட்பார்!

சூர்யாவின் பக்கத்துப் பக்கத்து வீட்டுக்காரர்கள் இயக்குநர்கள் பாரதிராஜா மற்றும் ஷங்கர். ஆனாலும், இவர்கள் இருவரின் படத்திலும் நடித்தது இல்லை சூர்யா!
தங்கை பிருந்தா மீது சூர்யாவுக்கு அலாதி பாசம். வாரத்துக்கு ஒரு முறையேனும் பிருந்தாவை அவர் பார்த்துவிட வேண்டும். நாட்கள் கடந்தால் இவரே தன் குழந்தை தியாவைத் தூக்கிக் கொண்டு தங்கையைப் பார்க்க ஓடிவிடுவார்!
தன்னுடன் கல்லூரியில் படித்த நண்பர்களின் வீடுகளுக்கு திடீர் விசிட் அடிப்பது, கிறிஸ்துமஸ், தீபாவளி, ரம்ஜானின்போது வாழ்த்து அனுப்புவது சூர்யா பழக்கம். “சினிமா நட்சத்திரம் ஆயிட்டோம் என்று நண்பர்களை மறக்க முடியாதுல்ல!“ என்பார்!

சினிமாவில் கமல்தான் சூர்யாவின் குரு. “தேவர் மகன்“ படம் வந்த சமயம் கமல் போலவே ஃபங்க் தலைமுடி வைத்துக் கொண்டு திரிந்தவர் சூர்யா!

சூர்யா கௌரவ நடிகராக நடித்த ஒரே படம் “ஜூன் ஆர்“. ஜோவின் அன்புக்காக அது. ரஜினிக்காக ஒரே ஒரு காட்சியில் நடித்த படம் “குசேலன்“. கமலுக்காக ஒரே ஒரு பாடலில் நடித்த படம் மன்மதன் அம்பு. பாலாவுக்காக ஒரே ஒரு காட்சியில் நடித்த படம் அவன் இவன்.

எல்லோரையும் “ஜி“ என்றுதான் அழைப்பார் சூர்யா. வயதில் மூத்தவர்களை “அண்ணே“ என்பார். மிகவும் நெருக்கமானவர்களைத்தான் பெயர் சொல்லி அழைப்பார்!
எம்.ஜி.ஆருக்குப் பிறகு அம்மா மீது பாசம்! இவரை அடித்துக்கொள்ள ஆளே இல்லை எனலாம். அந்தளவுக்கு அம்மா வார்த்தைக்கு மறு பேச்சு பேசாமல் நடந்துகொள்வார்!
தேசியக் கட்சி நடத்திய சர்வேயில் முதல் இடத்தில் வந்தவர் சூர்யா தானாம். ஆனால், அவர்கள் விடுத்த அழைப்புக்கு, “ஆளை விடுங்க சாமி“ என்று கையெடுத்துக் கும்பிட்டு வழியனுப்பி இருக்கிறார்!
சூர்யா சம்பந்தப்பட்ட குடும்ப விழாக்களில் நண்பர்கள், உறவினர்கள் தவிர கட்டாயமாக அழைப்பு அனுப்பப்படும் இரண்டு நண்பர்கள் விஜய், அஜீத்!.


பில்லா 1980


பில்லா 2008

## 35 கோடி செலவில்
## அஜித் நடிக்கும் பில்லா-2

அன்று 1980 களில் ரஜினி-ஸ்ரீபிரியா நடித்து பெரு வெற்றி பெற்ற பில்லா படம் 2008 மீண்டும் அஜித் நடித்து வெற்றிபெற்றது. தற்போது மீண்டும் பில்லா-2.என்ற பெயரில் படமாகிறது.
35 கோடி செலவில் அஜித் நடிக்கும் "பில்லா -2" படம் (14.07.2011) நேற்று தொடங்கியது. இந்த படம், முன்பு வெளியாகி வெற்றி பெற்ற "பில்லா" படத்துக்கு முந்தைய கதையமைப்பைக் கொண்டதாகும்.
"மங்காத்தா“வின் படப்பிடிப்பு முடிவடைந்தது. இதையடுத்து அஜித் ஓய்வில் இருப்பார் என்றும், அடுத்தப் படத்துக்கான இடைவெளி அதிகமாக இருக்கும் என்று பேசப்பட்டு வந்தது. இந்நிலையில் "பில்லா 2“-வின் படப்பிடிப்பை தொடங்கி விட்டார்கள். "உன்னைப் போல் ஒருவன்“ படத்தை இயக்கிய சக்ரி டோலட்டி இயக்குகிறார். பிரபு, ரகுமான் முக்கிய பாத்திரங்களில் நடிக்கிறார்கள். கதாநாயகிகள் ஹீமாகுரேஷி, புருணா இருவரும் புதுமுகங்கள்.



இது நிழல் அல்ல நிஜம்

நடிகர் சிவகுமாரின் இளைய மகனும் நடிகருமான கார்த்திக்கும் ஈரோடு அருகே உள்ள கிலாம்பாடியைச் சேர்ந்த சின்னசாமி - ஜோதி மீனாட்சியின் மகள் ரஞ்சனிக்கும் திருமணம் கடந்த 03.07.2011 அன்று நடைபெற்றது. தமிழர் மரபுப்படி திருப்பல்லாண்டு, திருப்புகழ், திரு வாசகம் என தமிழ் மறைகள் முழங்க, மணமகள் ரஞ்சனி கழுத்தில் தாலி கட்டினார் கார்த்தி.




வெற்றிமணி விழா - டோட்முண்ட் நகரில் 22.10.2011

18 வருட சேவையில் தங்கமாய் ஜொலிக்கும் நம்பிக்கை ஸ்தாபனம்

LITTLE INDIA
Textile & Jewellery

பட்டுச் சேலைகள், யப்பான் துணிவகைகள், தரம்மிக்க நகைகளுக்கும் நாடுங்கள்

02131 273692
Adolf Flecken Str.9
41460 Neuss

Little India வின் மற்றுமொரு சேவை
உலகெங்கும் இன்பமாய் சிறகடித்துப் பறக்க இதமான சேவை....

EurAsian - Tours

Neuss புகையிரத நிலையத்திற்கு அருகாமையில்

அனைத்து விமானச் சீட்டுக்களையும், குறைந்த விலையில் பெற்றுக் கொள்ள நாடுங்கள். India Visa பெறவும் உதவி செய்வோம். அத்துடன் தங்குமிட வசதி, Tour Bus ஒழுங்குகள் செய்து தரப்படும். முன் கூட்டியே எம்முடன் தொடர்பு கொண்டு ஆசனங்களைப் பதிவு செய்யலாம்.

Tel:02131 73 87 83 Fax: 02131 73 87 84
Rishi 0174 96 44 965

info@eurasian-tours.com
Rishi Ganeshamoorthy

Eurasian Tours
Adolf - flecken -Str.11
41460 Neuss

ASIA BAZAR

உங்கள் உறவுகளுக்கு பணம் அனுப்ப வேண்டுமா! இதோ!!!
துரித பண மாற்றுச் சேவை!

ஆசிய,ஆபிரிக்க உணவுவகைகள் வியாழன்சனிக்கிழமை தோறும் இலங்கை, இந்திய உடன் மரக்கறிவகைகள் கடல் உணவுப் பொருட்கள். இன்னும் பல...

தீபம் தொலைக்காட்சி அட்டைகள் எம்மிடம் கிடைக்கும்

உரிமையாளர்: பா.கணேஷ்

An der Stadt Mauer 2-4
41061 Mönchengladbach
Tel:02161 208303 Fax:02161-309282

Professional Filming
and Production Service

Full HD 1080p

Wedding
Arangetram
Birthday Parties
Puberty Cermony
TV Advertisements
Commercial Productions
and any Special Events

Kiri Video

Tel:0049 21 71 9480 36
Mob:0049 178 670 9612
Tel : 0049 2171 948036
Mob: 0049 178 6709612
0049 177 7076958
www.kirivideo.com

Jasmine Silk House
ஜஸ்மின் சில்க் ஹவுஸ்

யேர்மனியில் எமது நிறுவனத்தின் நேரடி இறக்குமதியாளர்கள்! தரத்திற்கும், மலிவிற்கும், அதே காரணம்!

Tel:02102 844744

Jasmin Silk House
Fester Str.50
40882 Ratingen
HP:0173 1937 325
T.Mohanadas

பட்டுச்சேலை,கூறைச்சேலை , வேட்டிகள், குருதா, சோலி பஞ்சாபிகள், மற்றும் சிறுவர்களுக்கான ஆடைகள் இறக்குமதிசெய்யப்பட்டு குவிந்துகிடக்கின்றன. என்றும் மலிவான விலையில்! சிறந்த தரத்தில்!! உயர் ரகத்தில்!!!
உங்கள் எண்ணம்போல் கிடைக்கும்.
ஒரு முறை விஜயம் செய்யுங்கள் தரத்தையும் மலிவையும் அறிவீர்கள்.
உண்மை விளங்கும்.

நாளும் இங்கு தீபாவளி!

டோட்முண்ட் நகரில்

ABI Fisch Markt

ABI Fisch Markt

ABI Fisch Markt
Linkams
Adlerstr.05
44137 Dortmund

Tel:0231 280 80 26

உடன் கடல் உணவுவகைகளுக்கும், பசுமையான மரக்கறிகளுக்கும் சிறந்த ஸ்தாபனம்!
மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனை செய்யப்படுகின்றது

தரமும் சுவையும் தரும்...

Tel:0231- 7252859

யேர்மனியில் டோட்முட் நகரில் சுவையான உணவிற்கு

CEYLON IMBISS
இலங்கை உணவகம்

இலங்கை,இந்திய, உணவுகள், தரம் குன்றாத சுவையுடன் கிடைக்கும்!

திங்கள் முதல் சனிவரை
காலை 11.30 முதல் மாலை 22.00 மணிவரை
ஞாயிறு மற்றும் விடுமுறை நாட்களில்
16.00 -22.00 மணி வரை

Annen Str.1
44137 Dortmund

Tel:0231 837848

MS Video Movie
Professional Video& photo Shooting

உங்கள் வீட்டில் விஷேசமா எங்களுக்கு போன் பண்ணுங்க...
கலைநயத்துடன் அழகுறப் படம்பிடித்துத் தருகின்றோம்.

M.Sakthi 0172 23 22 672

Fotoschnellservice
Münsterstr.31
44145 Dortmund
www.fotoschnellservice.net

பிருந்தா
Pirruntha
Silk House
Textile & Jewellery

22 கரட் தங்க நகைகள் நீங்கள் விரும்பும் இரகங்களில் பெற்றுக் கொள்ளலாம். திருமண பட்டுப் புடவைகள் மற்றும் அனைத்துவகை ஆடவர் மங்கயர் உடைகளுக்கும், அன்பளிப்புப்பொருட்கள் அனைத்திற்கும் நாடுங்கள்.

Handy :01703344059

Tel : 0711/ 61 58 976
Fax: 0711-61 42 663

Ludwig str. 92
70197 Stuttgart

தரமும் மலிவும் ஓர் இடத்தில்.

Pirruntha Imex

உங்கள் இல்லங்களுக்கு தேவையான அனைத்து மளிகைப்பொருட்கள் மற்றும் மரக்கறிவகைகளும் (ஆபிரிக்கத,தாய்லாந்து இலங்கை) மீன் வகைகள் அனைத்துக்கும் நாடுங்கள்!

Wilhelm Str.33
71034 Böbilimgan

Tel:07031 67 82 90
Fax:07031 681350